
# இருக்கிறம்

மாதம் இருமுறை

காத்திருப்பு 2 - இருக்கை 5 | ஒரு பொல்லாப்புமில்லை | 20-07-2008

## 70களில் பேருந்து சேவை



## கிடுகுவேலியும், ஒரே கடலும்..!

50/-

கறுப்பு ஜூலை 25 ஆண்டுகள்

ISSN 1800-3699

9 771800 369000

## ஆண் பெண் நட்பில் புனிதம் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு விற்பனையாளர்கள்







Poobalasingam Book Shop
Galle Road
Colombo-06

Winsor Book Shop
372,Galle Road
Colombo-06 0112589081

Jayantha News
331/1A
Colomb0-14

G.S.L.Groceries
272,Messenger Street
Colombo-12 0115351792

Silva
D.S.School Opposite
Colombo-07 0775078516

Gamage Stores
165,Havelock Road
Colombo-06

Tharshan
Narahenpitya Junction
777561390


08 எழுபதுகளில் பேருந்து சேவை







40 பெ று ம தி
த.ஜெயசீலன்

50 கிடுகுவேலியும், ஒரே கடலும்..!
கானா பிரபா







62 விரையும் பஸ்ஸில் வீரிடும் பயம்
பவித்திரா வரவேஸ்வரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு இருக்கிறம்

வணக்கம் வாசகர்களே

கறுப்புப் பற்றி உங்களோடு கொஞ்சம் பேச வேண்டும். இந்த வார்த்தையை இலங்கையில் "கறுப்பு" என்றும் தமிழகத்தில் "கருப்பு" என்றும் எழுதுகிறார்கள். நாம் வெறுப்புக்குப் பயன்படுத்தும் "று" வை கறுப்புக்குப் பயன்படுத்த, தமிழகம் விருப்புக்கு பயன்படுத்தும் "ரு"வை பயன்படுத்துகிறது. எல்லாம் அவரவர் அனுபவத்தைப் பொறுத்தது.

கறுப்பு ஒரு நிறமல்ல அதுவே நம் வாழ்வு. திருமணம் வருகிறபோதெல்லாம் கறுப்பு புறம் தள்ளப்படுகிறது. இனபேதம் பற்றியெல்லாம் பேசுகிற நாம் இந்த நிறபேதத்தை அதிகம் கண்டு கொள்வதில்லை. "சிவத்த படிச்ச பொம்பிளைகளைத்தான்" தன் மகனுக்கு எல்லா அம்மாமாரும் தேடுகிறார்கள். சொந்த மண்ணிலேயே எங்களை அடிமைகளாக்கிய வெள்ளையர்கள் எம் மனதில் பீய்ச்சிய எச்சத்தை மிகக் கவனமாக நாம் காக்கின்றோம்.

எங்கள் சுதந்திர தாகம் தணிய வேண்டுமென்றால் இந்த "அடிமையின் மோகம்" தொலைய வேண்டுமென்றான் பாரதி.


வாருங்கள் கண்மணிகளே! எமக்கே எமக்கான கறுப்பின் மீது காதல் கொள்ளலாம். "நாவல் பழத்திலயும் நல் காயாப் பூவிலயும், காகக் கறுப்பிலயும், கறுத்த மச்சான் எங்கள் மச்சான்" என்று பாடிய எங்கள் மூத்த காதலியை போற்றிப் பாடலாம். "காக்கைச் சிறகினிலே நந்தலாலா உந்தன் கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா" என்று கடவுளையும் காகக் கறுப்பில் கண்ட மகாகவிக்கு வாழ்த்துக் கூறலாம்.



என்ன கறுப்புப் பற்றி இத்தனை நீளமான பேச்சு என்று நினைப்பீர்கள். தமிழர்களே மன்னிப்பதை மட்டுமே உங்கள் நாகரிகமாக கொள்ளுங்கள். மறப்பதையல்ல. உங்களுக்கு வரவர மறதி அதிகம். 25 வருடங்கள் கழிந்தாலும் ஓராண்டின் யூலை மாதத்தில் வாழ்ந்தபடி கறுப்பை நினைக்காத அதீத மறதி உங்களுக்கு.

மாறா நினைவுகளோடு

இளையதம்பி தயானந்தா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம் பண்பாடு தமிழர்



தமிழ் மக்கள் யுத்தத்தோடும் வெள்ளை வான்களோடும் போராடிக் கொண்டிருக்கும் அதே வேளை தென்னிலங்கையில் தொண்டர் நிறுவனங்கள் மற்றுமொரு போராராட்டத்தில் குதித்துள்ளன. மனித உரிமைகள் குறித்துப் பணி செய்யும் நிறுவனங்களே இதற்கு முகம் கொடுக்கின்றன. இலங்கை அரசியலமைப்பின் 17ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக ஜனாதிபதி செயற்படுத்தவேண்டும் என்கின்ற கோரிக்கைப் போராட்டமே அது.

2001ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சந்திரிகா அரசிற்குக் கீழ் 17ஆவது திருத்தச் சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்தினால் கொண்டுவரப்பட்டது. அரச நியமனங்களில் அரசியல்வாதிகளின் தலையீட்டினால் ஊழலும் பாரபட்சமான நடவடிக்கைகளும் மலிந்த காரணத்தினால் அந்தப் பிரச்சினையைத் தீர்க்கவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றும் அதிகாரம் தவிர மற்றெல்லா அதிகாரங்களையும் கொண்டுள்ளேன் என்று அன்றைய ஜனாதிபதி திரு ஜே.ஆர் ஜயவர்தன மார் தட்டிப் பேசியவாறு எங்களுடைய ஜனாதிபதிக்குக் குவிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரங்களைக் குறைப்பதுதான் இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதன்படி பாராளுமன்றத்தின் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு அரசியலமைப்புச் சபை நிறுவப்படவேண்டும். இச்சபையானது சகல அரச நிறுவனங்களுக்கும் தேவையான நியமனங்கள் மாற்றல்கள் போன்றவற்றைப் பரிசீலித்து செயற்படுத்தும் சுயாதீன ஆணைக்-குழுக்களை நிறுவவேண்டும். முக்கியமாக இந்த ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகளிலோ அவை எடுக்கும் தீர்மானங்களிலோ அரசியல்வாதிகளின் எந்தவிதமான தலையீடுகளும் இருக்கக்கூடாது. ஆரம்பத்தில் இச்சட்டத்தை அமுல்படுத்துவதில் அரசாங்கத்துக்கு இருந்த ஆர்வம் மகிந்த ராஜபக்ஸ அவர்கள் பிரதமமந்திரியாக வந்த காலந்தொட்டுக் குறைய ஆரம்பித்தது. சகல கட்சிகளையும் கூட்டங்களுக்கு அழைப்பது தொடக்கம் அரசியலமைப்புச் சபைக்கான அவற்றின் நியமனங்களை ஊக்குவிப்பது வரை ஆமை வேகத்தில் நகரலாயிற்று. கடைசியில் மகிந்த ஜனாதிபதியாகப் பதவியேற்றபின்பு இச்சட்டம் கிடப்பில் போடப்பட்டது.



17வது திருத்தச்சட்டத்தில் குறிப்பிட்டு உள்ள பொலிஸ் நியமனங்கள் மற்றும் மாற்றல்கள்தான் எமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. பொலிஸ் அதிகாரங்களை வைத்துக் கொண்டுதான் இன்று அரசாங்கம் வெள்ளை வான் இயக்கங்களையும் தேர்தல் மோசடிகளையும் நிர்வகித்து வருகின்றது என்று சொன்னால் மிகையாகாது. இதற்கு ஆதாரமாகப் பல உதாரணங்களைக் காட்டலாம்.

சமீபத்தில் அரசாங்கம் பொலிஸ் திணைக்களத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்திருக்கின்றது. அவர்தான் இனி பொலிஸ் பிரிவினரின் சகல நியமனங்களையும் மாற்றல்களையும் ஒழுங்கு பேணும் தண்டனைகளையும் செயற்படுத்துபவராக இருப்பாராம். ஆனால் இதற்கெல்லாம் ஒரு பொலிஸ் ஆணைக்குழு இருக்கிறது. அதையும் மீறித்தான் ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார். இதன்மூலம் உடனடியாக குற்றச் செயல்களைத் தடுப்பதற்குத் துணை புரிந்த ஏராளமான நல்ல பொலிஸ் உத்தியோகத்தர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்முனைப் பொலிஸ் பொறுப்பதிகாரி
விஜயதிலக்க

அவர்கள் நிலையங்களிலிருந்து திடீரென மாற்றப்பட்டிருக்கின்றார்கள். துணிந்து கடமையைச் செய்யுங்கள் நாம் உங்களைப் பாதுகாப்போம் என்று இதுவரை பொலிஸ் ஆணைக்குழு வழங்கிவந்த உறுதிப்பாடு கலைந்தது. அண்மையில் தனக்கு தானே மரண தண்டணை வழங்கிய கல்முனை காவல்துறை பொறுப்பதிகாரி இதற்கு நல்லதோர் உதாரணம் இதுமட்டுமல்லாது எமக்கு கிடைத்த தகவலின்படி கிட்டத்தட்ட 401 பொலிஸ் ஸ்டேஷனில் கடமை புரிந்த 350 பொலிஸார் திடீரெனப் பதவி மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இது வரப்போகும் தேர்தல்களுக்கான அறிகுறியாகும்.

பொலிஸ்மாஅதிபர் வேறு வெள்ளை வான்களை எனக்கும் காட்டுங்கள் பார்க்க ஆசையாயிருக்கின்றது என்று ஹாஸ்யம் பண்ணியிருக்கிறார். இது போதாதென்று அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரம் இன்றியே ஜனாதிபதி பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிற்கும் பொலிஸ் ஆணைக்குழுவிற்கும் நியமனங்களை மேற்கொண்டுள்ளார். இது நாட்டின் அதியுயர் சட்டமான அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானதென்று சவால் விடுத்து இரண்டு சிவில் சமூக அமைப்புக்கள் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தன. இக்குற்றத்துக்காக ஜனாதிபதியைப் பதவி விலக்குச் (impeachment) செய்யலாமென்றும் பகிரங்க அறிக்கைகள் விடுத்தன. இப்படி நடப்பதை எங்காவது நாங்கள் கேட்டிருப்போமா? ஒரு பிரஜை அதுவும் நாட்டின் அதியுயர் பதவி வகிக்கும் ஜனாதிபதி அந்த நாட்டின் அதியுயர் சட்டத்தினை மீறுகிறார். சுனாமியின் பின்பான P-TOMS சட்டத்தைப் பகுத்துப் பார்த்து நிராகரிப்பதிலும் வட-கிழக்கு இணைப்பைத் துண்டாடுவதிலும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை அக்கு வேறு ஆணி வேறாக அலசிப்பார்த்து அதன் பிழைகளை நிறுவுவதிலும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் கண்ணுக்குள் எண்ணெய் ஊற்றிக் கொண்டு சட்டத்தைப் பிரயோகித்ததை நாம் எம் கண்ணால் கண்டோம். ஆனால் அப்பட்டமாக அரசியலமைப்புச் சட்டம் மீறப்படுவதை கண்டிக்க சிவில் அமைப்புக்களைத் தவிர யாருமே இல்லை. சுவாரஸ்சியமாக இந்த அநீதிதான் தமிழ் பேசும் மக்களின் விடிவுக்கான முதல் படிக்கல்லாக மாறியிருக்கின்றது. எங்கள் நாட்டின் சட்டங்கள் அவை எவ்வளவோ நல்ல சட்டங்களாக இருக்கலாம் ஆனால் பிரயோகிக்கப்படுவதில் பாரபட்சமாக செயற்படுகின்றன என்பதை நாம் சர்வதேச நீதிமன்றிலும் சர்வதேச அரங்குகளிலும் தெரிவித்தாலே போதும். அதுவும் இவ்வாறு வெளிப்படையாக நடக்கின்றது என்று நிறுவவேண்டும். ஒற்றையாட்சியோ சமஷ்டியோ எதுவென்றாலும் இந்தச் சட்டங்களுக்கும் அதை நடைமுறைப்படுத்தும் நீதித்துறைக்கும் கீழும்தானே வாழவேண்டும். எனவே அவ்வாறு வாழவே முடியாது என்று நிரூபித்தவர்களாவோம்.

இந்த நிலையில எமது மக்களுக்கான சுயநிர்ணய உரிமையை யாருமே மறுக்கமுடியாது. அது சகல நாட்டவரின் அங்கீகாரத்தோடும் சட்டபூர்வமாக்கப்பட வேண்டியதுதான். ஆனால் இந்த மாற்றங்கள் தானாகவே நடக்காது. நாம்தான் பொது அபிப்பிராயங்களின் அணிதிரட்டல்கள் மூலம் எமது கோரிக்கைகளை எல்லோருக்கும் தெரியப்படுத்தவேண்டும். அதற்காக கட்சி சாராத ஒரு அரசியல் அமைப்பு ஒன்றை தமிழ் மக்கள் எற்படுத்தவேண்டும். தம்முடைய எதிர்காலத்தின் பொறுப்பை யார் தலையிலோ சுமத்தி விட்டு தாம் வெறுமனே ஒன்றும் செய்யாதிருக்கும் தமிழ் மக்கள் இனியாவது விழித்தெழுவார்களா? வாசகர்களே நீங்கள்தான் பதில் சொல்லவேண்டும்.

பதிப்பகத்தார்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுபதுகளில் பேருந்து சேவை

முருகேசு ரவீந்திரன்




**கடந்து போன வாழ்க்கையின் சில மங்கலான நினைவுகள் மனதின் மூலையில் எஞ்சியிருக்கும். இவை நிச்சயம் ஒரு முழுமையான ஆவணமாக அமையமாட்டாது. இருந்தாலும் சுவாரசியம் கருதி எழுத்தில் பதிவாக்க விரும்புகிறேன். அதன் வெளிப்பாடே இந்த ஆக்கம்.**

**இலங்கை** போக்குவரத்து சபை சிறப்பான முறையில் இயங்கிய காலப் பகுதியாக எழுபதுகளைக் குறிப்பிடலாம். வட பிராந்திய போக்குவரத்து சபை யாழ் மாவட்டத்திலே மூன்று டிப்போக்களை கொண்டிருந்தது. இன்றும் இந்த டிப்போக்கள் இயங்கி வருகின்றன. வடபிராந்திய போக்குவரத்து சபையின் கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் டிப்போ, காரைநகர் டிப்போ, பருத்தித்துறை டிப்போ என்பவற்றைக் குறிப்பிடலாம். கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் டிப்போ அதிக பேருந்துகளைக் கொண்டிருந்தது. பாதை எண் 764 பலாலி வீதியூடாக சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பேருந்துகளைக் குறிப்பதாக இருந்தது. பாதை எண் 764 பேருந்துகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ்ப்பாண நகரில் இருந்து பலாலி வீதியூடாக கீரிமலை, காங்கேசன்துறை, அம்பன், தெல்லிப்பழை, பலாலி, பருத்தித்துறை, வயாவிளான் ஆகிய இடங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

23ஸ்ரீ 5095, 23ஸ்ரீ 5096, 23ஸ்ரீ5097, 23ஸ்ரீ5098 ஆகிய பேருந்துகள் பலாலி வீதியூடான போக்கு வரத்தில் பிரசித்தமானவையாக இருந்தன. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அசோக் லேலண்ட் பேருந்துகள் இந்தியாவிலேயே முழுமையாக body அமைக்கப்பட்டவை. இந்தப் பேருந்துகளின் ஆசனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக இருபக்கங்களிலும் பக்க வாட்டாக அமைந்திருந்தன. இதனால் அதிக பயணிகளை ஏற்றக் கூடியதாக இருந்தது. இந்தப் பேருந்துகளில் இரு நடத்துனர்கள் கடமையாற்றினர்.

1975 ஆம் ஆண்டு, பாதை இலக்கம் 764 பேருந்தில் கோண்டாவிலில் இருந்து கந்தர் மடம் சந்தி வரை பயணிக்க முப்பது சதம் அறவிடப்பட்டது. இது பலாலி வீதியூடான பேருந்துக் கட்டணம்.

அந்தக் காலப் பகுதியில்தான் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அப்போது யாழ்ப்பாண வளாகமாக அது இயங்கியது. ஒரு பகுதி தற்போது பல்கலைக் கழகம் அமைந்துள்ள திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி பகுதியிலும், கட்டிட வசதி போதாமையால் சில பீடங்களின் விரிவுரைகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் நடைபெற்றன. விரிவுரையாளர்களையும் மாணவர்களையும் வட்டுக்கோட்டைக்கும் திருநெல்வேலிக்கும் ஏற்றிச் செல்வதற்காக பேருந்துகள் சேவையில் விடப்பட்டன. காரைநகர் டிப்போவைச் சேர்ந்த பாதை இலக்கம் 784, 785, ஆகிய பேருந்துகள் திருநெல்வேலிவரைவிடப்பட்டன.

காரைநகரிலிருந்து வட்டுக்கோட்டை கல்லுண்டாய் வழியாக யாழ் நகர் வரை பாதை இலக்கம் 784 பேருந்துகள் சேவையில் விடப்பட்டன. பொன்னாலையிலிருந்து வட்டுக்கோட்டை வழியாக யாழ் நகருக்கு 785 பாதை இலக்க பேருந்துகள் சேவையில் ஈடுபட்டன. யாழ். வளாகம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் யாழ் நகர் வரையில் சேவையில் ஈடுபட்ட இந்தப் பேருந்துகள் திருநெல்வேலிச் சந்தி வரை சேவையை நீடித்தன. யாழ் நகரிலிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக நாச்சிமார் கோயிலடி வரை வந்த இந்தப் பேருந்துகள் அங்கிருந்து பரமேஸ்வரா வீதியூடாக பலாலி வீதிக்குச் சென்று திருநெல்வேலிச் சந்தி வரை பயணித்தன.

காரைநகர், வட்டுக்கோட்டை பகுதிகளைச் சேர்ந்த மரக்கறி வியாபாரிகளும் காலை வேளைகளில் இந்தப் பேருந்துகளில் திருநெல்வேலிச் சந்தைக்கு வருவார்கள். திருநெல்வேலிச்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தியில் இருந்து பேருந்து புறப்படும் போது பயணிகளை விட சில வேளைகளில் மரக்கறிமூடைகள் அதிகமாக இருக்கும். அவற்றுக்கு கட்டணம் வேறாக அறவிடப்படும்.

அப்போதெல்லாம் பேருந்துகளில் பயணிகளை ஏற்றிய பின்பு பயணச் சீட்டு வழங்கும் நடைமுறை பின்பற்றப்படுவதில்லை. பயணச்சீட்டை பெற்றுக்கொண்ட பின்பே பேருந்துகளில் பயணிகள் ஏற முடியும். பயணச் சீட்டை பெற்றுக்கொள்ளாது ஏறும் பயணிகள் பேருந்தைவிட்டு பலவந்தமாக இறக்கப்படுவார்கள். பேருந்தில் பயணச் சீட்டு இல்லாது ஒருவர் ஏறிவிட்டார் என்பதற்காக பேருந்தினுள் வைத்து அவருக்கு பயணச்சீட்டு வழங்கப்படமாட்டாது.

1975 ஆம் 1976 ஆம் ஆண்டுகளில் பாடசாலை பேருந்து சேவைகள் சிறப்பான முறையில் நடைபெற்றன. பாதை இலக்கம் 764 பாடசாலை சேவை பேருந்து தெல்லிப்பழையிலிருந்து பலாலிவீதியூடாக யாழ் மத்திய கல்லூரிவரை சேவையில் ஈடுபட்டது. இந்தப் பேருந்தில் பயணிக்கும் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் கந்தர் மடம் சந்தியில் இறங்கி தமது கல்லூரி வரை நடந்து செல்லவேண்டியிருந்தது. அப்போது பாதை இலக்கம் 764 பாடசாலை சேவை பேருந்து யாழ் இந்துக் கல்லூரி வழியாக செல்வதில்லை.



யாழ்ப்பாணத்தில் இரட்டைத் தட்டு பஸ் வண்டிகளும் முன்னர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. இவை செல்லும் பாதைகளின் ஓரத்தே உள்ள மரங்களின் கிளைகள் வெட்டி பாதைகள் துப்பரவாக்கப்படும். யாழ்ப்பாணத்தில் பாதைகள் ஒடுக்கமானவையாக இருந்தன. வீதியோரங்களில் வேலிகள் கூடுதலாக காணப்பட்டன. வேலியோரம் காணப்பட்ட பூவரசு மரங்களும் சீமைக் கிழுவை மரங்களும் இரட்டை தட்டு பஸ் வண்டிகளின் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருந்தன. சேவையில் பாதை இல 784 யாழ்ப்பாணத்திலிருந்து காரை நகருக்கு இரட்டை தட்டு பஸ் வண்டிகள் சேவைக்கு ஈடுபட்டன. கல்லுண்டாய் வெளி ஊடாக இந்த இரட்டை தட்டு பஸ்கள் பயணிக்கையில் அதில் செல்வோர் சிறந்ததொரு உல்லாசப் பயணமாக உணர்வர். கடற்கரை ஓரமாக காரைதீவு, வழுக்கையாறு என இயற்கை அழகுமிக்க இடங்களைத் தாண்டி பொன்னாலைப் பாலத்தினூடாக இரட்டைத் தட்டு பஸ்ஸில் காரைநகருக்கு பயணிப்பது ஒரு அற்புதமான அனுபவமாகும்.


இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகள் யாழ் மாவட்டத்தில் பல பாதை இலக்கங்களில் சேவையில் ஈடுபட்டன. அவற்றை எல்லாம் எழுதுவதானால் இன்னும் நிறைய எழுத வேண்டும். இதனை வாசிக்கும் நீங்களும் ஏதோ நான் இலங்கை போக்குவரத்துச் சபை பற்றி புழுகுகிறேன் என எண்ணக் கூடாதல்லவா? எனவே இது போதும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேடிப் பகிர்தல்

என். சிறிரஞ்சன்

# விளையும் பயிர்



வொறன் பஃபட்

**உலகத்தில் முதலாவது பணக்காரராக தற்போது இடம் பிடித்திருப்பவர் வொறன் ப::பட (Warren Buffett).**

உலகத்தில் முதலாவது பணக்காரராக தற்போது இடம்பிடித்திருப்பவர் வொறன் பஃபட் (Warren Buffett). விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள். அதுபோல பஃபட் தனது மிகச் சின்ன வயதிலேயே செல்வம் சேர்க்கத் தொடங்கிவிட்டார். சிறுவயதில் அவர் மேற்கொண்ட வணிக முயற்சிகள் சில:

பஃபட் இற்கு ஐந்து வயதாக இருக்கும்போது தன் வீட்டிற்கு முன்னால் இருந்த நடைபாதையின் ஓரமாக துணிக் கூடாரம் அமைத்து இனிப்பு, பபிள்கம் என்பவற்றினை விற்று வந்தார்.

தனது ஆறு வயதில் தனது தாத்தாவிடம் கொக்கோ கோலா டின்களை பெற்றுப் அவற்றை வீடு வீடாகக் கொண்டு சென்று விற்றார். பதினொரு வயதில் கம்பனிப் பங்குகளை வாங்கினார். சிட்டிஸ் சேர்விஸ் என்ற நிறுவனத்தில் ஆறு பங்குகளை வாங்கியதன் மூலம் தனது பங்குச்சந்தை முதலீட்டினை ஆரம்பித்தார்.

பதின்மூன்று வயதில் பஃபட் வீடு வீடாகச் சென்று பத்திரிகை விநியோகம் செய்தார். பதினேழாவது வயதில் 40 ஏக்கர் நிலத்தினை கொள்வனவு செய்து அதைப் பிரித்துக் குத்தகைக்கு கொடுத்து வருமானம் ஈட்டினார்.

இவ்வாறு சிறுவனாக இருக்கும்போது பல தொழில்களைச் செய்து வருமான மீட்டிய வொறன் பஃபட்டின் வருமானம் அக்காலப்பகுதியில் பல வளர்ந்தவர்களின் வருமானத்திலும் பார்க்க அதிகமாக இருந்தது. தனது 13 ஆவது வயதில் தனது முதலாவது வரிக் கணக்கினைத் தாக்கல் செய்து வருமானவரி கட்டத் தொடங்கினார்.

பாவம், கஷ்டப்பட்ட குடும்பத்தில் பிறந்த பிள்ளை போல! இளம் வயதிலேயே உழைக்கத் தொடங்கிவிட்டது என்று எண்ணத் தோன்றுகிறதா? வொறன் பஃபட் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவரல்ல. அவரின் தந்தை வங்கி அதிகாரியாகப் பணிபுரிந்து பின்னர் அமெரிக்க செனட் சபை உறுப்பினரானவர். தந்தை செனட் சபை உறுப்பினராகி வொஷிங்ரனில் குடியேறியபோதுதான் பஃபட் பேப்பர் விநியோகம் செய்யத் தொடங்கினார்.

ஒரு வசதியான படித்த உயர் பதவி வகித்த சமுதாயத்தில் மிகவும் செல்வாக்கு கொண்ட ஒருவரின் பிள்ளை தெருவோரத்தில் இனிப்பு





வொறன் பஃபட்டின் வீடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விற்பதும் வீடு வீடாகச் சென்று குளிர்பானம் விற்பதும் பேப்பர் விநியோகிப்பதும் எம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா?

சர்வதேசப் பாடசாலையில் படிப்பு, போய்வர சொகுசு வாகனங்கள் மேலைத்தேய உணவகங்களில் சாப்பாடு என்ற வாழ்க்கைக்குப் பழக்கப்பட்ட நம்மவர்களின் பிள்ளைகள் எங்கே! வொறன் பஃபட் எங்கே? கொக்கோ கோலா ரின்களை வீடு வீடாகச் சென்று விற்ற பையன் பின்நாளில் கொக்கோ கோலா கம்பனியின் மிகப்பெரிய பங்குதாரர்களில் ஒருவரானான் (கொக்கோ கோலாவில் அவரின் முதலீடு பதினொராயிரம் கோடி ரூபா) பேப்பர் விற்ற பையன் பின்நாளில் தான் விற்ற அதே வோஷிங்ரன் போஸ்ட் என்ற பத்திரிகை நிறுவனத்தினதும் பஃபலோ நியுஸ் என்ற இன்னுமொரு பத்திரிகை நிறுவனத்தினதும் பெரும்பாலான பங்குகளை கொள்வனவு செய்ததன் மூலம் அவற்றின் உரிமையாளரானார்.





வொறன் பஃபட் தன்
புதிய மனைவியுடன்



அடுப்பிலே
பொங்காத பானைக்காக ஏங்கியவனுக்கு
வகுப்பிலே
பாடம் நடந்தது
முகேசு அம்பானியைப் பற்றி...

புதுச்செருப்பு வாங்கும்
ஏக்கம்
மறைந்து போனது
குண்டு வெடிப்பிலே கால்களை
இழந்த
சிறுவனைப் பார்த்த போது.....

# ஏழைகள்

- மட்டுவில் ஞானக்குமாரன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டாற்றங்கரை

வ.ஐ.ச.ஜெயபாலன்

**"இப்படிச் சொல்லித்தான் ஈரப்பெரிய குளமெல்லாம் தமிழரைக் கலைச்சுப் போட்டாங்க. 1958ஆம் வரியமே ஊருக்கிள நிண்ட எல்லா அரசமரத்தையும் வெட்டீற்றம். புத்தர் சிலையளையும் உடைச்சுக் காட்டுக்குள்ள எறிஞ்சிட்டம். இப்ப எங்கிட கண்ணுக்குத் தப்பிக் கிடந்த புத்தர் சிலையள் மாதிரி நீங்க ரெண்டு பேரும் வந்து நிக்கிறியள்"**

## பாகம் 4

**பேராசிரியர்** இந்திரகுமாரன் ஆடிப்போனார். "அமைதியாய் இருங்க அமைதியாய் இருங்க" என்ற படி இரகுநாதன் எழுந்து வந்து முத்துத்தம்பியைக் கட்டிப்பிடித்தான்.

"பௌத்தம் சிங்களவரிண்ட சொத்தில்லை பெரியவர். இதொண்டும் சிங்களவற்ற தேரவாத விகாரைகளுமில்லை. எங்க மூதாதையள் மகாஜான பௌத்தர்களாய் இருந்தவை. இது மகாஜான பௌத்த கோயில்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாலனுக்கு வெக்கை தாங்க முடியவில்லை. காட்டுக்குள் இருந்த அனுமானிடர்கள் பார்த்துக் கொண்டிருக்கிற உணர்வு மீண்டும் அவனுக்குள் ஓங்கியது.**

பெரியவர்" சாமியாடிய முத்துத்தம்பியர் மெல்ல மெல்ல வழமைக்குத் திரும்பியது, இப்பவும் பாலனின் மனசில் நிழலாடியது. கதையை மாற்றி வேட்டைக்கார முத்துத்தம்பியை சந்தோஷப்படுத்துவதற்காக இரகுநாதன் இறுதித் தமிழ் சிற்றரசனான ப்ண்டாரவன்னியனின் பெருமைகளைப் பேச ஆரம்பித்தார். "எங்கட கொப்பாட்டன்ர கொப்பாட்டனுக்கு தகப்பன் பண்டார வன்னியனோட நகமும் தசையுமா இருந்திருக்கிறாராம். எங்க பாட்டன் சொல்லித் தந்தவர்" என்று முத்துத்தம்பி பெருமிதப் பட்டார்.

"வேற என்ன சொன்னார்"

"அவன் பெரிய வீரன்தான் ஆனாலும் சரியான மூர்க்கன் எண்டு சொன்னார். யாற்ற சொல் புத்தியும் கேக்கானாம்"

வரலாறு என்ன தேவதைக் கதையா, மனிதர்களின் கதைதானே என்று இந்திரகுமாரனே அன்று அந்த விவாதத்தை முடித்து வைத்தார்.

அப்போது பாலனுக்கு "வரலாறு தேவதைக் கதை இல்லாவிட்டாலும் தேவதைக் கதைகள் எல்லாம் வரலாறு தானே" என்று தோன்றியது. அதனைச் சொல்ல முன்னம் காலி மதுக் கிண்ணங்களை எடுத்துக் கொண்டு இந்திரகுமாரனும், இரகுநாதனும் எழுந்துவிட்டார்கள். முத்துத்தம்பியும் தன் கையில் இருந்த கிண்ணத்தை பாலனிடம் நீட்டியபடி "ஐயோ எனக்கும் நேரம் போச்சுது. கிழவி பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி போயிற்றுவாறன்" என்றார்.

பாலன் பாலியாற்றங்கரைகளை மீண்டும் நோட்டம் விட்டான். போன வருடம் இந்திரகுமாரனையும், இரகுநாதனையும் பாலியாற்றுக்கு அழைத்து வந்தபோதும் இப்படி வறண்டு ஆற்றுப்படுகை சேறாய்க் கிடந்த கோடைக்காலம் தான். "என்ன பாலன் கவிதையெண்டாலும் பாலி ஆற்றைப் பற்றி ஏதோ நைல் நதியை, கங்கை நதியைப் பற்றி எழுதிறமாதிரி இவ்வளவு பொய் எழுதிறதா பொய்க்கும் ஒரு கணக்கு வளக்கு வேண்டாமா" என்று செல்லமாக அவனைத் துரத்தி முதுகில் தட்டினார். பாலனுக்கு வெக்கை தாங்க முடியவில்லை. காட்டுக்குள் இருந்த அனுமானிடர்கள் பார்த்துக் கொண்டிருக்கிற உணர்வு மீண்டும் அவனுக்குள் ஓங்கியது. சற்றுத் தள்ளி ஆற்றோரமாக முதிய மருத மரத்தின் வேரடியில் தலை சாய்த்துத் தூங்க வசதியாக மணல் மேடிருந்தது. சென்ற முறை வந்த போது தண்ணீர் சுழித்தோடிய இடங்கள் அவை. இன்றோ நிலமை எதிர் மாறாக இருந்தது.


எல்லாம் இழந்து வறுமைப்பட்ட ஒரு பெரு நிலக்கிளான் தன்னுடைய குலத்தெரு வீதியில் நடை மெலிந்து கூனிக் குறுகிச் செல்வது போல பாலியாறு சந்தடியின்றி நகர்ந்து கொண்டிருந்தது.



"குடை நிழல் இருந்து
குஞ்சரம் ஊர்ந்தோர்
நடை மெலிந்து ஓர் ஊர்
நண்ணினும் நண்ணுவர்"

என்கிற சின்ன வயதில் படித்த பாடலை அவனது உதடுகள் மீட்டியது. எனினும் ஆற்றுக்கு மரணமில்லை என்பதையும் அவை நொடித்துப் போகாமல் பீனிக்ஸ் பறவையாய்த் தம்மை புனரமைத்துக் கொள்கின்றன என்பதனையும் அவனுக்கு உணர்த்தும் வகையில் அங்கு காரியங்கள் பல நிகழ்ந்தன.

போரிலும் பஞ்சத்திலும் நோஞ்சனாய் நசிந்த போதும் தன் பிள்ளைகளைக் காக்க ஓடி ஓடிச் செயற்படுகிற ஒரு அன்னையின் துடிப்பை மட்டும் அந்தச் சிற்றாறு ஒரு போதும் இழந்துவிடவில்லை. அது தனது வரண்ட படுகையில் வாடி வதங்கிய நாணற்புதர்களின் வேர்களை நக்கி நனைத்தது. சுடு சேற்றுக்குள் வெந்து கொண்டிருந்த அல்லிக் கிழங்குகளை குளிர வைத்து நம்பிக்கையூட்டியது. இறந்த விலங்கில் இருந்து களருகிற தெள்ளுப் பூச்சிகளையும், குருட்டு ஈக்களையும் திட்டித் தீர்த்தபடி சிறகு விரித்த நீர்ப் பறவைகளை அந்த ஆறு புரிந்து கொண்டது. இன்று போய் அடுத்த மாரிக்கு வாருங்கள் என்று பரிவோடு அந்த நன்றி கெட்ட பறவைகளிடம் பரிவோடு சொன்னது. எஞ்சியிருந்த காற்றில் ஈரமாக தொற்றி எட்டமுடியாத கரையில் உலர்ந்துகொண்டிருந்த புல் பூண்டுகளின் விதைகளின் மீது கவிந்தது. அவற்றிடம் தளராமல் மாரி வரைக்கும் மண்ணுக்குள் பதுங்கி இருங்கள் என்று புத்தி சொன்னது. நாணல் மண்டிய சகதிக் குட்டைக்குள் ஒப்பாரி வைத்த மீன்களை நோக்கி நிறுத்துங்க எனக் குரல் கொடுத்தது. முதல்ல முட்டைகளை மண்ணுக்குள்ள புதைச்சிட்டு சேற்றுக்குள்ள தலைமறைவாகிற வழியைப்பாருங்க, ஒப்பாரியை விடுங்க, வாழ்வுக்காக ஆசையோட போராடணுமல்லா என அதட்டியது. அவற்றின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகள் போருக்கும் அதிகாரங்களுக்கும் எதிராக கிளருகிற பாலனின் மனசுக்கு எழுச்சியும் புத்துணர்ச்சியும் தந்தது.

பாலன் முதிய மருத மரத்தின் அருகில் சென்றான். வேர்களின் பக்கமாக மேடிட்டிருந்த மணலின் குந்திச் சரிந்து மருத மர வேர்களில் தலை சாய்த்து வானத்தைப் பார்த்தான். உச்சியில் இருபுறத்து மரங்களும் கைகோர்த்து முகடு கட்டியிருந்தன. பசிய தழை முகட்டின் மேலே பரந்த வானம் வெள்ளை நெருப்பாக கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. அவனது ஆன்மாவில் இருந்து ஆழ்ந்த பெருமூச்சு சொன்று நெஞ்சாங்கூட்டை உடைத்தது. அதன் எதிரொலிபோல பல பெருமூச்சுக்கள் தொடர்ந்தன. காட்டின் அகலத்தில் இருந்தும் நாணல்கரைகளின் ஆழத்தில் இருந்தும் மருதங் கொப்புகளின் உயரத்தில் இருந்தும் பெருமூச்சுக்கள் பாலனை சுற்றி வளைத்தன. எதிரொலியா, பிரமையா, அல்லது பிரபஞ்சத்தின் குரலா? பாலன் துணுக்குற்றுப் போனான். மீண்டும் காடுகள் விம்மித் தணிந்த போது அச்சமடைந்தான். பாட்டி கதைகளில் வருகிறது போல நிசமாகவே காடுகள் பேசுதல் கூடுமா? ஊழியின் முன்னே சாபத்தால் மரங்களாய்ச் சமைந்த தேவர்களும் தேவதைகளும் போல காடு அவனைச் சூழ்ந்து நின்றது. சினத்துடன் "வேரில்லாத கீழ்பிறப்பு" என பக்கத்தில் நின்ற முதிரை மரம் அவனைச் சபித்தது. வேரில்லாத கழிசடைகளில பறவையளை நம்பினாலும் இந்த மனிசனை மட்டும் நம்பக் கூடாது என்று வேறொரு முதிரை மரம் சினந்தது. போர்க்களத்தில் பாய்ந்து வருகிற மோட்டார் செல்களின் சீட்டி ஒலிபோல நாலாபுறத்தில் இருந்தும் அவன்மீது பெருமூச்சுக்கள் குற்றம் சுமத்தும் தொனியில் இறங்கி வந்தன. வெகுண்ட கலைமான்களைப் போல மருத மரங்கள் கொம்பர்களை சிலுப்பி அசைத்தது. பாலனின் பொறுமை உடைந்தது. அச்சத்தை மிஞ்சிய சினத்துடன் என்னில என்ன குற்றம் என்று பாலன் கத்தினான். மீண்டும் பெருமூச்ச விட்ட மருத மரமொன்று "உங்களைத் தெரியுமடா எங்களுக்கு" என்று பதிலுக்குக் கத்தியது. "வேரோடும் விழுதோடும் நூறு நூறு வருசம் இந்தக் கரையில இருக்கிறமடா. எங்களுக்குத் தெரியாதாடா உன்னை" என்றபடி மருத மரமொன்று அவன்மீது விழுவது போல கோபத்தோடு சரிந்து வந்தது.



" ஆறு வற்றும் வரை மீன் கொத்தி காட்டில. மரம் தறிக்கும் வரை மனிசன் காட்டில" காட்டுக்குள் இருந்து ஒரு மரத்தின் குரல் கேட்டது. "இது எங்க முன்னோர்கள் வார்த்தை. அடங்கு அடங்கு அடங்கடா" கோடையின் வெக்கையை மீறிக் காட்டின் கொதிப்பு ஏறியது. நிலமை கட்டுமீற முன்னம் நொந்து நூலாகிப் போயிருந்த பாலியாறு காட்டையும் மருத மரங்களையும் ஊஸ் என்று அதட்டி அடக்கியது. பின்னர் பாலனைக் கனிவோடு மகனே என்று விழித்தது. பாலன் அம்மா என்று நெகிழ்ந்தான். அழுத்தமாக "எழும்பு மகனே" என்றது பாலியாறு. "எழும்படா மகனே எழும்பு உனக்குக் கீழ் ஒரு பொம்பிளைப் பிள்ளையல்லாடா படுத்திருக்கு"

பாலனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆந்தைபோல தலையால வட்டமிட்டபடி பேந்தப் பேந்த முழித்தான். "அவள் சின்ன வயசில அறிமுகமாகி எங்க கண்ணுக்கு முன்ன எங்க மடியில வளர்ந்த பிள்ளையடா எல்லா. மருத மரங்களுக்கும் அந்த நாணல் புதர்களுக்கும் ஏன் இந்தக் கரையோரக் காடுகள் முழுதுக்குமே சினேகிதியாய் வாழ்ந்தவளடா. பாவம் கோடைக்கால நதிகளை மிஞ்சிய தூரத்தோடும் வாலைப் பருவ கவிகளை மிஞ்சிய கனவுகளோடும் படுத்திருக்கிறாள். முதல்ல எழுந்திரடா" அதிர்ச்சியடைந்த பாலன் என்ன எனக்குக் கீழே ஒரு பொம்பிளையா என்று அலறியடித்துக்கொண்டு துள்ளி எழுந்தான். அவன் படுத்திருந்த மணல் மேட்டிலிருந்து மண்ணுக்குள் இருந்து "தாகமாயிருக்க தண்ணி தண்ணி" என்று ஒரு

**பாலனின் பொறுமை உடைந்தது. அச்சத்தை மிஞ்சிய சினத்துடன் என்னில என்ன குற்றம் என்று பாலன் கத்தினான்.**

பெண்ணின் முனகல் ஒலி உயர்ந்து வந்தது. பாலனுக்கு மயிர் கூச்செறிந்தது. "வேரிலி முண்டம். தவிச்ச விடாய்க்கு தண்ணிதராத வேரிலி முண்டம்" என்று மீண்டும் பாலன் மீது பாய்ந்த மருத மரங்களை மீண்டும் பாலியாற்றுத் தாய் தான் அதட்டி அடக்கினாள். மீண்டும் தண்ணீர் யாசிக்கும் இளம்பெண்ணின் வேதனைக் குரல் எழுந்தது. வாய் கட்டப் பட்ட காடுகள் சினம் தாளாது காற்றைப் பிடித்து உலுப்பின.


காற்று வலிதாளாமல் அலறியது. பாலன் சேறில் இறங்கி கற்பாறைப் பக்கமாக ஓடினான். என்ன ஆச்சரியம். அங்க ஒரு குளம் போல நெளிந்த தண்ணீர் தேங்கி இருந்தது. நாணல்களும் பச்சைப் பசேலென்றிருந்தன. அல்லிச் செடிகள் சில பூத்திருந்தன. பாலன் அவசரம் அவசரமாக ஒரு அல்லி இலையைப் பறித்து தொன்னை கோலினான். தொன்னை நிறைய நீரை மொண்டு இரு கைகளாலும் தாங்கியபடி திரும்பி ஓடினான். மணல் மேட்டின் மீது தொன்னையை சரித்து விரல்களால் நீரை உடைத்து விசிறித் தெளித்தான். மணல் மேடு நனைந்து குளிர்ந்த போது மீண்டும் அந்தப்பெண் குரல் நன்றி என்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வானொலிக் கால நினைவுகள்








**கொழும்பில் அந்நாட்களில் "நிழல்" என்ற பெயரில் கலைப்பத்திரிகை ஒன்று வெளிவந்துகொண்டிருந்தது. அதில் கலைஞர் ஏ. ரகுநாதன், பத்திரிகையாளர் பிரேமகாந்தன் போன்றோர் சம்பந்தப்பட்டிருந்தார்கள். 'நிழல்' பத்திரிகைக்காரர் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 'நிழல் நாடகவிழா' வினை ஒரு வாரகாலத்திற்கு நடத்தினார்கள். பல்வேறு பாணியிலான நாடகங்களை தொடர்ந்து ஒரு வாரகாலமாக அதுவும் இலவசமாகப் பார்க்கும் வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது.**



ஏ. ரகுநாதன்

**சானாவின்** "சாணக்கியன்", சுஹேர் ஹமீட்டின் "அவளைக் கொன்றவள் நீ", லடிஸ் வீரமணியின் "சலோமியின் சபதம்" போன்ற புகழ்பெற்ற நாடகங்களோடு கே.எம். வாசகரின் "பார்வதி பரமசிவம்" என்ற சமூக நாடகமும் மேடையேறியது.

பார்வதி பரமசிவம் பாத்திரங்கள் நான் எதிர்பார்த்தது போல நாடகத்தில் கணவன் மனைவியாக இருக்கவில்லை. பணக்கார அண்ணனும் ஏழைத் தங்கையும்தான் அவர்கள். தன் மகன் பல்கலைக்கழகம் செல்லப்போகிறான் என்று உதவி கேட்டுச்செல்லும் வறுமையினால் உருக்குலைந்த தங்கையை உதாசீனம் செய்கிறான் பணக்கார அண்ணன். எப்படியோ கொழும்பு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


போய்ச் சேர்ந்த மகன் தாயின் கனவுகளைச் சிதைக்கும் வகையில் அங்கே ஒரு அழகிய பெண்ணின் மீது காதல் கொண்டு படிப்பை மறந்து குடிக்கு அடிமையாகி இறுதியில் இறந்தும் விடுகிறான். மகனைத் தேடி வரும் தாய்க்கு அவன் இறந்த சங்கதி தெரியவருகிறது.

சோகமயமாக முடிந்த இந்த நாடகத்தின் முடிவில் இயக்குனர் வாசகர் கலைஞர்களை அறிமுகப்படுத்துகிறார். எல்லோரும் மேடைக்கு வந்தார்கள். ஏழைத்தாயும் வந்தார். ஆனால் இடையில் வந்த அழகான பெண்ணான காதலி மேடைக்கு வரவில்லை. எங்களுக்கு அவர் யார் என்று அறியவேண்டும் என்ற ஆவல் ஒரு பக்கம். அப்போதுதான் வாசகர் சொன்னார் அந்த இளம்பெண்ணாகவும், முதிய தாயாகவும் மாறி, மாறி நடித்தவர் சுப்புலட்சுமி காசிநாதன் தான் என்று. அப்போது கலைத்துறையில் காலடி எடுத்து வைத்திராத எனக்கு ஒரு நடிகனாக வரவேண்டுமென்ற உத்வேகத்தை தந்தது அந்தக் கணம்தான்.



சிவஞானசுந்தரம்

பின்னொரு நாளில் அவரின் வீட்டிற்குப்போய் எனது பாராட்டுக்களைத் தெரிவித்ததோடு 'சிரித்திரன்' பத்திரிகைக்காக மிக நீண்டதொரு பேட்டி எடுத்தேன். 'சிரித்திரனில்' ஏறக்குறைய 12 பக்கங்கள் வந்த அந்த நீண்டபேட்டியை பிரசுரித்ததோடு அட்டைப்படத்திலும் அவரது புகைப்படத்தை இடம்பெறச் செய்தார் ஆசிரியர் சிவஞானசுந்தரம் அவர்கள். திருமதி காசிநாதனின் நடிப்புத்திறனில் அவருக்கிருந்த அபிமானத்தினால்தான் இது சாத்தியமாயிற்று. காலப்போக்கில் நான் வானொலிக் கலைஞனாக வந்ததின் பின்னர் பல வானொலி நாடகங்களில் சுப்புலட்சுமி அக்காவுடன் இணைந்து நடிக்கும் வாய்ப்புக்கள் கிடைத்தன. அவர் ஒரு 'சீனியர்' கலைஞராக இருந்தபோதிலும் என்னைப்போன்ற இளைய தலைமுறையினரை சமமாகவே நடத்தினார். இந்தப் 'பந்தா' சங்கதிகள் எதுவும் அவரிடம் இருந்ததில்லை.



கே.எம். வாசகர்

ஒரு சுவாரஸ்யமான அனுபவம். நானும் திருமதி காசிநாதனும் ஒரு வானொலி நாடகத்தில் ஜோடியாக நடித்தோம். நாடகத்தின் பெயரோ, எழுதியவரின் பெயரோ ஞாபகத்திற்கு வரவில்லை. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் இரவு புகையிரதத்தில் ஒன்றாக பயணம் செய்யவேண்டி நேர்ந்த முன் அறிந்திராத ஒரு இளைஞனும் இளம்பெண்ணும் சூழல், சந்தர்ப்பத்தினால் தங்களை இழந்து விடும் ஒரு 'ரயில் சிநேகிதத்தின்' கதை. அரை மணித்தியாலத்துக்குரிய நாடகம். ஆனால் பிரதியின் நீளம் போதாது என்ற காரணத்தினால் தயாரிப்பாளர் வாசகர் ஜோடியாக நடித்த எங்களிடம் கொஞ்ச நேரம் தருகிறேன் மேலதிகமாக சில வசனங்களை உங்கள் கற்பனையில் உருவாக்கிச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அனுமதி' தந்தார். நாங்கள் இருவரும் எப்படி நடிக்கப்போகிறோம் என்று பேசிக்கொண்டோம். நாடகத்தின் ஒலிப்பதிவு ஆரம்பமாயிற்று. பெரிதாக வசனங்கள் பேசினோம் என்றில்லை. சிரிப்பு, சிணுங்கல், நளினம், கெஞ்சல் என்று அந்த அமானுஷ்யமான உறவை தேர்ந்தெடுத்த வார்த்தைகளால் 'ஒலி' யில் இருவரும் செதுக்கினோம். கூட நடித்தவர்கள் ஒலிப்பதிவு கூடத்தின் நாலாபக்கத்திலும் உள்ள சாக்குப்படங்கு அடித்த (ஒலி கசியாமல் இருப்பதற்காக) சுவர்களை முதன்முதலாக பார்ப்பது போல கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒலிப்பதிவு முடிந்ததும் வாசகர் மிகுந்த சந்தோசத்தடன் வந்தார். பாராட்டினார். சிலகாலத்தின்பின் நாடகம் ஒலிபரப்பாகிய பின்னர்தான் பிரச்சினையே ஆரம்பித்தது. நாடகத்தின் அடிநாதமே ஆபாசமானது என்ற குற்றச்சாட்டு கூட்டுத்தாபனத்தின் உள்ளிருந்தே முன் வைக்கப்பட்டது.

தமிழ் நிகழ்ச்சியின் மேலதிகப் பணிப்பாளர் சி.வி. இராஜசுந்தரத்திடம் இந்தக்குற்றச்சாட்டை விசாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. தயாரிப்பாளர் வாசகர் நாடகத்தின் ஒலிப்பதிவு நாடாவுடன் வரும்படி அழைக்கப்பட்டார். கூடவே நான், திருமதி காசிநாதன் போன்றோரும் அழைக்கப்பட்டோம். பணிப்பாளர் இராஜசுந்தரத்தின் அறைக்கு வெளியே நாங்கள் காத்திருந்தோம். வானொலி நாடகங்களில் நடிப்பதிலிருந்து தற்காலிகமாக எங்கள் இருவருக்கும் தடை விதிக்கப்படலாம் (தற்கால கிரிக்கெற் வீரர்களுக்கு நிகழ்வதுபோல) என்று கூட நினைத்துக்கொண்டோம்.



திருமதி.சுப்புலட்சுமி காசிநாதன்

நாடகத்தை ஆற அமரக் கேட்டபின் வெளியே வந்த திரு. இராஜசுந்தரம் "நாடகம் வெகு சிறப்பாக இருந்தது" என்ற ரீதியில் வாசகரையும் நடித்த எங்களையும் பாராட்டியதோடு அந் நாடகத்தை மீண்டும் ஒலிபரப்பவேண்டுமென்று பணித்ததாக ஞாபகம். "ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்ற கதையாகப்போய்விட்டது.

இவ்வாறு பல வானொலி நாடகங்களில் நானும் திருமதி சுப்புலட்சுமி காசிநாதனும் ஒன்றாக நடித்தபோதிலும் இலங்கையில் இருக்கும் வரை ஒரு மேடை நாடகத்திலும் இருவரும் ஒன்றாக நடிக்கும் வாய்ப்பு கிட்டவில்லை. ஆனால் கனடாவில் மஹாகவியின் 'புதியதொரு வீடு' பாநாடகத்தில் மறைக்காடராகவும், கண்ணாத்தையாகவும் நாம் இருவரும் நடித்தபோது அந்தக்குறையும் தீர்ந்தது.

எனது கலை வரலாற்றில் ஆரம்பப்புள்ளியாக இருந்த அவரது மேடைநாடக வரலாற்றில் வெகுகாலம் தாழ்த்தியாவது இணைந்து கொள்ளக் கிடைத்தது எனக்குச் சந்தோசமே.


மஹாகவி


ஒலிச்சித்திரங்கள் என்ற நிகழ்ச்சி நாடகங்களைப்போலவே முக்கியத்துவம் பெற்ற அந்த நாட்களில் ஒலிம்பிக் போட்டிகள், சாதனைக் களத்தில், நீர் (தண்ணீர்தான்) போன்ற சில ஒலிச்சித்திரங்களை எழுதியதோடு வேறு பல ஒலிச்சித்திரங்களில் பங்குபற்றியுமிருக்கிறேன். இந்நிகழ்ச்சியின் தயாரிப்பாளராக நீண்ட நாட்களாக இருந்தவர் எஸ். நடராஜா அவர்கள்.

**நினைவுகள் தொடரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொக்டர். என். கே. முருகானந்தன்

# அப்பா ஒதுங்கிப் போறார்






**அப்பா** இப்ப முந்தி மாதிரி இல்லை. ஒதுங்கி ஒதுங்கிப் போறார். முந்தி மாதிரி எங்களோடை அதிகம் கதைக்கிறதில்லை. தனக்கு ஒண்டும் இல்லை எண்டுட்டார். உங்களிட்டை வர மாட்டன் எண்டும் சொல்லிப் போட்டார். நான் தான் நட்டுப் பிடிச்சுக் கூட்டிக் கொண்டு வந்தனான் என்றாள் மகள் மிகுந்த மன வேதனையுடன். அப்பா முகத்தில் சலனமில்லை. விட்டேத்தியாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு வயது 70 இருக்கும். மன விரக்தியாக இருக்குமோ என எண்ணிய நான் ஐயாவுக்கு என்ன பிரச்சனை என்றேன். ஐயா மறுமொழி கூறவில்லை ஆனால் எனது முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

ஐயாக்கு காது கேக்கிறது கொஞ்சம் குறைவோ என்று கேட்டபோது அப்படித் தெரியல்லை எங்களோடை வடிவாக் கதைக்கிறார்தானே என்றாள். ஏதோ பொருளை எடுப்பது போல மறு பக்கம் திரும்பிப் பார்த்துக் கொண்டு ஐயா உங்களுக்கு எத்தனை வயசு என்று கேட்டன். மறுமொழி வரவில்லை. சந்தேகம் நிருபணம் ஆகியது.

காது மந்தமாவது என்பது வயதானவர்களைப் பாதிக்கும் ஒரு முக்கியமானதும் பரவலானதும் ஆன பிரச்சனையாகும். 65 வயதுக்கு மேற்பட்டவர்களில் 15- 40 சதவிகிதத்தினரும் 75 வயதுக்கு மேற்பட்டவர்களில் 50 சதவிகிதத்தினரும் 85 வயதுக்கு மேற்பட்டவர்களில் 80 சதவிகிதத்தினரும் செவிப் புலன் குறைபாட்டால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே வயதாகும் போது காது மந்தமாவது என்பது நியதி போலவே இருக்கிறதே அன்றி விதிவிலக்காக அல்ல என்று சொல்லலாம் போலிருக்கிறது.

இது மிக மெது மெதுவாகவே ஏற்படுகின்ற பாதிப்பு என்பதால் பலரும் ஆரம்ப கட்டங்களில் தமக்கு இக்குறைபாடு உள்ளதை தாமாகவே உணர்ந்து கொள்வதில்லை. முகத்துக்கு நேர முகம் பார்த்துப் பேசும்போது அவர்கள் புரிந்து கொள்வதால் உறவினர்களும் உணர்ந்து கொள்ளத் தாமதமாகலாம்.

செவிப்புலன் என்பது நாம் எமது சூழலுடன் தொடர்பாடுவதற்கு மிக முக்கியமான உணர் திறனாகும். இதன் இழப்பானது மனித வாழ்வின் முழுமையை அந்த வாழ்வனுபவத்தின் பூரணத்துவத்தையே சிதைத்துவிடும். செவிப்புலன் இழப்பானது மூளையின் செயல் வீச்சைக் குறைக்கிறது, ஆரோக்கியமான உணர்வுகளை மரக்க வைக்கிறது, மனநலத்தைப் பாதிக்கிறது, கற்றலை முடக்குகிறது, தொழில் வாய்ப்பைச் சிதைக்கிறது எனப் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. வயதானவர்களின் காது மந்தமாகும் போது மற்றவர்களுடன் வழமை போலப் புரிந்து பேசி உறவாட முடியாமல் தடுமாறுகிறார்கள். தனிமைப்படுகிறார்கள். வழமையான நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்கிறார்கள். இவற்றால் ஏக்கத்திற்கும் மனவிரக்திக்கும் ஆளாகும் இவர்கள் உறவினர்களிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் தாமாகவே ஒதுங்கிக்கொள்கிறார்-






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். இது தான் அப் பெண்மணியின் அப்பாவுக்கு நடந்தது.

காது மந்தமாதல் இரண்டு வகை யானது. முதலாவது ஒலியானது சுழலிருந்து காதுத் துவாரம் வழியாக செவிப்பறைக் குருத்தெலும்புக ளூடாகக் கடத்தப்படுதலில் உள்ள கோளாறாகும். செவிப்பறை பாதிப்படைதல் செவிப்பறை துவாரமடைதல் குருத்தெலும்புகள் இறுகுதல் போன்றவற்றால் 'இது நேரலாம். இரண்டாவது வகை நரம்பு மண்டலம் சம்பந்தப்பட்டது. ஒலியை உணர்தல் அதனைப் பாகுபடுத்தி விளங்கிக் கொள்ளல் ஆகியவவை பாதிப்புறுவதால் ஏற்படுவது. இது மூப்படைவதின் ஒரு கட்டமேயாகும். ஒருவர் முகத்திற்கு நேரே பேசும் போது விளங்கிக் கொள்ளும் வயேதிபர் பலர கலகல எனப் பேசும் போது புரிந்து கொள்ளச் சிரமப்படுவது ஒலியை




பாகுபடுத்தி விளங்க முடியாதிருப்பதாலேயே. புறச் சத்தங்கள் அதிகமாக உள்ள இடங்களிலும் ஒலி எதிரொலிக்கும் இடங்களிலும் அவர்களால் கேட்க முடிவதில்லை. அதே போல விரைவாகப் பேசுவோரின் உரையாடல்களையும் புதியவர்களின் பேச்சுக்களையும் அவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை.

வயதானவர்களின் காது கேளாமையை முழுமையாகக் குணப்படுத்தக் கூடிய சிகிச்சைகள் எதுவும் கிடையாது என்பது உண்மைதான். ஆயினும் அவரகளின் குறைபாட்டைத் தணிப்பதற்கு பல வழி முறைகள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்த உதவுவது உறவினர்களின் கடமையாகும். காது கேட்கும் கருவிகள் பலன் தரக் கூடும். ஆயினும் 10-15 சத விகிதமானவர்களே அக் கருவிகளைத் தொடர்ந்து உபயோகிக்கிறார்கள். காரணம் அது இயற்கையான காதுக்கு மாற்றீடு அல்ல. அத்துடன் கூட்டமான இடங்களில் புறச் சத்தங்களும் குழப்பக் கூடும். அத்தருணங்களில் இரண்டு காதுக்குமே கருவியை உபயோகிப்பது பிரயோசனமாயிருக்கும். ஸ்பீக்கர் போன் ஒலி அதிகரித்த தொலைக் காட்சிப் பெட்டி ஒலியுடன் ஒளியையும் உமிழும் அழைப்பு மணி போன்ற பாவனைப் பொருட்கள் அவர்களைச் சுழலுக்குள் திருப்தியோடு அணைந்து இயங்க உதவக் கூடும்.காது மந்தமானவர்களுடன் பேசும் போது நீங்கள் அவதானிக்க வேண்டியவை, முகத்தை வேறு பக்கம் பார்த்துக் கொண்டு பேசாதீர்கள். அவர்களுக்கு உங்கள் முகம் தெளிவாகத் தெரியும் படியான இடத்தில் இருந்து பேசுங்கள். குரலை உயர்த்திப் பேசாதீர்கள். சாதாரண குரலில் பேசுங்கள். விரைவாகப் பேசாதீர்கள். ஆறுதலாகவும் தெளிவாகவும் பேசுங்கள். உங்கள் உதடுகள் வாசிக்கப்படக் கூடியவாறு பேசுங்கள். நீங்கள் பேசுவது அவருக்குப் புரியாவிட்டால் குரலை உயர்த்தி மீண்டும் மீண்டும் அதையே சொல்வதை விடுத்து வேறு சொற்களால் சொல்லுங்கள்.

கூட்டமான இடங்களில் வைத்துப் பேசாதீர்கள். ஒதுக்குப் புறமாக சத்தம் சந்தடி குறைந்த இடத்திற்கு கூட்டிச் சென்று உரையாடுங்கள்.

காது கேட்கும் கருவி உபயோகிப்பவராயின் அது சரியாக வேலை செய்கிறதா என்பதையும் உரிய இடத்தில் சரியாகப் பொருத்தப்பட்டிருக்கிறதா என்பதையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.

முகம் கண்கள் கைகள் ஆகியவற்றை பயன்படுத்தி சைகை மொழிகளுடன் பேசுங்கள். உங்கள் பேச்சைப் புரிந்து கொள்ள முயற்சித்து அது



## நலம் தானே

முடியாததால் அவர் சோர்ந்து விட்டதை அவதானித்தால் உங்கள் உரையாடலை வேறு ஒரு தருணத்திற்கு ஒத்தி வையுங்கள்.

ஆயினும் மூப்படைதல் மட்டுமே காது கேளாமைக்கு ஒரே காரணம் என்றும் சொல்லிவிட முடியாது. தொழில் ரீதியாகவோ(உ+ம் இயந்திர ஓசைகள்) பொது வாழ்வின் போதோ, கடுமையான ஒலிகளுக்கு நீண்ட காலம் முகங் கொடுக்க நேர்வது செவிடாவதைத் துரிதப்படுத்தக் கூடும். பல வகை மருந்துகள், காதுக் குடுமி, பரம்பரையில் விரைவில் காது மந்தமாதல், நடுக் காது நோய்கள் போன்றவையும் காரணமாகலாம் என்பதால் நீங்களாக முடிவெடுக்காமல் வைத்திய ஆலோசனை பெறுவது நல்லது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலைந்த பக்கங்கள்...



## நடிகவேள் எம்.ஆர்.ராதா



மயில்வாகனம்
சர்வானந்தா

ஆந்திராவை பூர்வீகமாகக்கொண்ட போத்தம் வரதய்யா சென்னை மூர் மாக்கட்டில் பிரபலமான வியாபாரி அவரது மருமகன் ராஜகோபால் நாயுடு ராணுவ சேவையில் இருந்தார், இவர் சேவையில் இருந்த போது யுத்த களத்தில் இறந்தார். இதனால் போத்தம்வரதய்யா தனது மகளின் பிள்ளைகளை வளர்க்க வேண்டிய சூழ்நிலை, ஆனால் அவருக்கு வயோதிபம், பாரிசவாதம் போன்றவையோடு வறுமையும் வந்ததால் பேரப்பிள்ளைகளை நன்குபராமரிக்க முடியவில்லை. போத்தம் வரதய்யாவின் பேரனான ராதா வீட்டில் கோபித்துக் கொண்டு எழும்பூர் ஸ்ரேசனில் திருட்டு ரயில் ஏறினான்.

சிதம்பரம் நகரில் ரங்கசாமி நாயுடு அவர்களின் ஆலந்தூர் போய்ஸ் நாடக கம்பனியில் இணைந்து கொண்ட சிறுவன் ராதா முதன் முதலில் நாடக மேடையில் தோன்றினான்.இதில் இச்சிறுவனுக்கு கிடைத்த வேடம் வசனம் பேசாத பாலகிருஷ்ணன் வேடம். அடுத்து நல்ல தங்காள் கிணற்றில் தூக்கிப் போடும் ஏழு பிள்ளைகளில் ஒரு பிள்ளைப் பாத்திரம் காலம் நகர ஜெகன்னாதையரின் நாடக கம்பனியில் சேர்ந்தார். இவ்வாறே சில கம்பனிகளில் நடித்து விட்டு எம்.ஆர்.ராதா சொந்தத்தில் ஒரு கம்பனியை ஆரம்பித்தார். அதன் பெயர் சரஸ்வதி கான சபா பல நாடகங்களை மேடையேற்றியது, இதில் முக்கியமானவை லட்சுமிகாந்தன், ராஜசேகரன் என்பன, அமெச்சூர் நாடக ஆசிரியரான தஞ்சை என். விஸ்வநாதையர் எழுதிய 'ராஜசேகரன்' நாடகம் பல்வேறு குழுக்களால் மேடையேற்றப்பட்டு மக்களின் அபிமானத்தைப் பெற்றிருந்தது. இவ்வாறு புகழ் பெறும் நாடகங்கள் பின்னாட்களில் சினிமாவாக எடுக்கப்பட்டன. ராஜசேகரன் நாடகம் 1937 இல் திரைப்படமாகியது, இதில் ராஜசேகரனாக நடித்தவர் எம்.ஆர்.ராதா. அப்போது நாடக மேடையில் மிகப் பிரபலமாக விளங்கிய எம்.ஆர். ராதாவுக்கு சினிமா உலகின் போக்குகள் பிடிக்கவில்லை. ராஜசேகரன் டைரக்டரோடு மோதல் ஏற்பட்டது. எம்.ஆர்.ராதா தன்னம்பிக்கையும் நடிப்பாற்றலும் விளங்கியவராக இருந்தார். இதனால் தன்னை யாரும் அடக்கியாள விரும்பமாட்டார். இவையே ராஜசேகரன் பட டைரக்டரோடு மோதல் ஏற்பட காரணமாயிற்று.

இது பற்றி ஒரு வாரப்பத்திரிகைக்கு எம்.ஆர்.ராதா கூறியதை அப்படியே தருகிறேன். "காலை நான்கு மணிக்கே மேக்கப் போட்டு காத்துக் கொண்டிருக்க வேண்டும். டைரக்டர் மெள்ள ஒன்பது மணிக்கு வருவார், அவர் வரும் போது மெள்ள எழுந்து நிற்க வேண்டும். அவ்வாறு எழுந்து நிற்க தவறியவர்கள் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்படுவார்கள். நான் மட்டும் நடிப்புத் துறையில் பிரபலமானவனாக இருந்ததால் மரியாதை செலுத்தாமல் இருப்பேன். தவிர டைரக்டரைப்போல நானும் ஒன்பது













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிக்கு வர ஆரம்பித்தேன். இதனால் மற்றவர்களுக்கும், முக்கியமாக டைரக்டருக்கு என் மீது கோபம் ஏற்படச்செய்தது. எனக்கு குடிப்பழக்கம் உண்டு. சென்னை புரசவாக்கத்திலிருந்து பிரபல வெள்ளைக்கார ஹோட்டலுக்கு மது அருந்த படத்தின் டைரக்டரும் வருவார். நானும் அங்கு போவேன். நமக்கு சம அந்தஸ்தில் இவன் இருப்பதா என்று டைரக்டருக்கு பற்றி எரியும்" இவையே கருத்து மோதலுக்கு காரணமாயிற்று.

எப்படியோ 'ராஜசேகரன்' படத் தயாரிப்புப் பணி முடித்து படமும் வெளிவந்தது. ராஜசேகரன் திரைப்பட படப்பிடிப்பின் போது எம்.ஆர்.ராதாவின் காலில் முறிவு ஏற்பட்டது. இதனால் ஒருவருடம் ஓய்வெடுக்க வேண்டிய நிலை இவருக்கு ஏற்பட்டது. இவர் குணமாகியதும் மொடேன் தியேட்டர்ஸ் அதிபர் T.R.சுந்தரம் சத்தியவாணி என்ற படத்தில் இவரை நடிக்க அழைத்தார். இதிலும் பல முரண்பாடுகள், முறுகல்கள் தொடர்ந்தன. அந்தப் படத்தோடு சினிமாவிலிருந்து எம்.ஆர். ராதா விலகியிருந்தார். சினிமாவிலிருந்து மீண்டும் நாடக மேடைக்குத் திரும்பியவர், மேடையின் சக்கரவர்த்தியாக தமிழகமெங்கும் பவனித்தார். அலங்காரமேடை, காட்சி ஜோடனை எதுவுமில்லாமல் ராதா நடத்திய நாடகங்கள் அவரது தனித் தன்மை வாய்ந்த நடிப்புக்காகவே வரவேற்புப் பெற்றது. விமலா அல்லது விதவையின் கண்ணீர் என்ற நாடகத்தை சீர்திருத்த கொள்கை வசனங்களுடன் அரங்கேற்றினார். இவரது நாடகங்களில் மிகவும் பிரபலமானது 'ரத்தக்கண்ணீர்' ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட தடவைகள் ரத்தக்கண்ணீர் மேடையேறி நாடக வரலாற்றில் சாதனை படைத்தது. ராதாவின் மற்றுமோர்



பரபரப்பான ஒரிஜினல் ஸ்ரீ சம்பூர்ண ராமாயணம் இது ஒரு நையாண்டி நாடகம். இந்த நாடகத்தை பார்த்த ரசிகர்கள் கண்டனக் குரல் எழுப்பினர். இதனால் நாடகத்தை தடை செய்ய சட்டம் கொண்டுவரப்பட்டது.

ஆனால் புதிய புதிய பெயர்களில் இந்த நாடகத்தை இவர் மேடையேற்றினார்.

நாடக மேடைகளிலே பெரும் புகழ் பெற்று 'நடிகவேள்' என்ற சிறப்புப் பட்டமும் பெற்ற எம்.ஆர்.ராதா மீண்டும் 1954 இல் சினிமாவுக்குள் பிரவேசித்தார். அதே ஆண்டில் அவரது 'ரத்தக்கண்ணீர்' திரைப்படமாகி மாபெரும் வெற்றி பெற்றது. ஆனாலும் ராதாவைக் கண்டு பட உலகினருக்கு பயமிருந்தது. இதனால் தொடர்ந்து இவருக்கு படங்கள் கிடைக்கவில்லை. அது பற்றிக் கவலையில்லாமல் தனது நாடக மேடையில் கவனம் செலுத்தினார். ஆஸ்திகரும், திராவிட இயக்கங்களின் எதிர்ப்பாளருமான ஏ.பி.நாகராஜன் தனது 'நல்ல இடத்து சம்மந்தம்' படத்தில் ராதாவை ஒப்பந்தம் செய்தார். 1958 இல் வெளிவந்த இப்படத்தில் கதாநாயகன் வில்லன் கலந்த வேடம். அதிலிருந்து ராதாவின் தமிழ் சினிமா சகாப்தம் உதயமாகியது. தாமரைக்குளம், உலகம் சிரிக்கிறது, பாகப்பிரிவினை என்பன 1959 இல் வெளிவந்தவை. பாகப்பிரிவினையில் சிவாஜிகணேசன் கதாநாயகன், ராதா வில்லன். குரலை ஏற்றி இறக்கி ராதா பேசிய வசனங்கள் சிரிப்பு அலைகளை தியேட்டர்களில் உருவாக்கியது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாஜிகணேசன், எம்.ஜி.ராமச்சந்திரன், ஜெமினிகணேசன், எஸ்.எஸ்.ராஜேந்திரன் என எந்தக் கதாநாயகன் நடித்தாலும் வில்லனாக எம். ஆர். ராதா நடித்தால் படம் வெற்றி பெறும் என்ற நிலை இருந்தது. 1960 இல் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, கவலை இல்லாத மனிதன், இரத்தினபுரி இளவரசி, கைராசி, ஆடவந்ததெய்வம், கடவுளின் குழந்தை என இவர் திரைப்படப்பட்டியல் நீண்டு கொண்டே சென்றது. 1961 இல் குமுதம், தேவரின் தாய்சொல்லைத் தட்டாதே, சபாஷ்மாப்பிளே, பாவமன்னிப்பு என்பன வெளிவந்து இவருக்கு நல்ல பெயரைக் கொடுத்தது. 1962 இல் சாரதா, பாசம், படித்தால் மட்டும் போதுமா, பலே பாண்டியா, காத்திருந்த கண்கள், கலைஞரின் காஞ்சித்தலைவன், குடும்பத்தலைவன், சாந்தா என்பன வெளியாகின. பலே பாண்டியாவில் சிவாஜி கணேசனும், ராதாவும் வாயசைத்து நடித்த மாமா, மாப்பிளே பாடல் மிகவும் பிரபலமானது. இதில் கடம் வாசிப்பது போல் நடித்தவர் பாலாஜி.

1963 இல் இருவர் உள்ளம், நானும் ஒரு பெண், கற்பகம், பரிசு, வேட்டைக்காரன், நீதிக்குப்பின் பாசம் போன்ற படங்களில் நடித்து தனது நடிப்பு ஆற்றலை வெளிப்படுத்தினார் எம்.ஆர். ராதா. 1964 இல் என் கடமை, தாயின் மடியில், பச்சை விளக்கு, கைகொடுத்ததெய்வம், என்பன வெளியாகின. எம்.ஆர். ராதா கதாநாயகனாக நடித்து 1965 இல் வெளி வந்த படம் ஹலோ மிஸ்டர் ஜமீந்தார். இது தவிர சந்திரோதயம், பழனி, சாந்தி ஆகிய படங்களும் வெளிவந்தன. 1966 இல் சித்தி, பெற்றால்தான் பிள்ளையா, என்பன இவருக்கு பெயரும் புகழும் பெற்றுத்தந்த படங்கள்.

1967 ஜனவரியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களோடு எம்.ஜி.ராமச்சந்திரன் ராயப்பேட்டை மருத்துவமனையிலும், எம்.ஆர்.ராதா பொது மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டனர். எம்.ஜி.ராமச்சந்திரனை கொலை செய்ய முயன்றதாக எம். ஆர். ராதா மீதே குற்றம் சாட்டப்பட்டு வழக்கு நடந்து. சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.





1971 ஜூலைமாதம் ராதா விடுதலையானார். அம் மாதம் 13ஆம் திகதி செய்தியாளர்களுக்கு பேட்டிதந்தார். அதில் எனக்கு நாடகம் தான் பிரதானம். நாடகம் மூலம் தான் நான் நாட்டுமக்களுக்கு அறிமுகமானேன். சினிமா எனக்கு சைட் பிஸ்னஸ். எனவே மீண்டும் நாடகங்களை நடிக்கப் போகிறேன் என்று கூறினார்.

பார்த்த சாரதி சபாவில் ரத்தக்கண்ணீர், தூக்குமேடை போன்ற நாடகங்களை அரங்கேற்றினார்.

அடுத்து சுட்டான்! சுட்டேன்! சுட்டாள்! என்ற பெயரில் திரைப்படம் தயாரிக்கப்போவதாக அறிவித்தார். ஆனால் படம் வெளிவரவில்லை.

1978 இல் வண்டிக்காரன் மகன்,1979 இல் ஆடு பாம்பே, பஞ்சபூதம் படங்களில் நடித்தார். தந்தை பெரியார் மீது பற்றுக் கொண்ட நடிகவேள் எம்.ஆர்.ராதா 1979ஆம் ஆண்டு பெரியார் பிறந்த நாளன்று திருச்சியில் காலமானார்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெறுமதி

ஏரென்னும் விரல்கள் இரசித்து
வயல் முதுகில்
போடுகிற கோலத்தைப் போல எழிற்கோலம்
இல்லையெனச் சொல்லி
இடையிடையே தன்குளம்பால்
புள்ளிகளும் போட்டு நடைக்கிறது இளநாம்பன்
வில்லாய் வளைந்த
விண் விரியும் எல்லை வரை
சதுரம் சதுரமாய்த் தெரியிது வரம்புகள்
கதியால் வேலியற்ற களனி
தெருவோரம்
நிலையாய்க் குடை பிடித்து நிற்கின்ற பூவரசு
சிறு தொலைவில் அல்லி சிலிர்த்திருக்கும்
நல்ல நீர்த்
துறை, அதன் அயலில்
சும்மா பொழுது போக்காய்
மேயும் பசுக்கள்
மேய்க்கும் சிறுவர்கள்
காய்த்து முறுகிய கரும்தேகம்
வேர்வைப் பூ
பூக்க வெயிலும் அஞ்சப்
புழுதி விதைக்கின்ற
மண்ணினது மைந்தர், மருங்கே களை புடுங்கி
எண்ணம் மனையில் இருக்கப்
பரபரக்கும்
பெண்டிர்
அருகில் பெரிய சுமைகளற்ற
வண்டில்
நிழலில் அசை போடும் மாடு... மெல்லத்
தொட்டுக் களைதுடைக்கும் காற்று
கவி இசைக்கும்
சிட்டு ....மனது சிறைப்பட்டுக் கிடக்கிறது
இந்த வயலோரம் இளைப்பாறி
கவி மனது
விந்தைக் கனவுகளில் வீழ்ந்து வசம் இழக்கும்
ஒவ்வோர் நொடிகளுக்கும்
பெறுமதி கிடையாது



த.ஜெயசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருநல் நினைவுகள்

கவிஞர் திமிலைத் துமிலன்

## ஆணவ முனைப்பில் ஓர் ஆன்மீக ஊற்று

**வாரித்தம்பி போடியார், அப்பிடி நடந்து கொண்ட புறகு, அவரக் காண எனக்கு விருப்பமில்ல. அவருக்கேன் அப்படிக் கேட்டுது? அவரப் பறையன் எண்டு சொல்லுறதால எனக்கென்ன நன்மை? ஒரு வேள அவருக்கு காது கேக்கிறதில கோளாறோ? "எண்டு இப்படி பலப்பல எண்ணி எண்ணி குழம்பினது தான் மிச்சம்.**

**அத** மறக்க முயன்றாலும் அவர வயலில கண்டா அந்த நெனைப்பு வந்து ஒரு வெறுப்பு முளைக்கும். ஆனா அவருர மூத்த மகன் சங்கரா என்னக் கண்டா பகிடி விட்டுச் சிரிக்க வைப்பான். அவருர இளைய மகன் ராசரத்தினம் என்னச் சந்திச்சா "பெரிய தம்பிக் கிளவர், எப்பிடிப் பாடு?" எண்டு சிரிப்பான். நானும் சிரிச்சிக் கொண்டு ஓடுவேன். வாரித்தம்பிப் போடியாருக்கு ராசரத்தினத்திற்கு மூத்த ஒரு மகன் இருக்கிறதாக தெரியும். ஆனா அவன நான் வலையிறவில ஒருநாளும் கண்டதேயில்ல. அவன்ட பெயர் ஜீவரத்தினம் எண்டும், அவன் கல்லடிச் சிவானந்தா பள்ளிக் கூடத்தில படிக்கிறதாகவும் ஆரோ சொன்னது ஞாபகமிரிக்கி.

வலையிறவிலிருந்த கிராம சபைச் சேர்மன் கருணாகரம் எங்கட குடும்பத்துட நெருக்கமாக இருந்தான். காரணம், பெரியம்மாட மகன் வடிவேல் அவனோட நண்பனாக ஆனதுதான். ஆனா கருணாகரம் வாரித்தம்பி போடியாரோட ஏதோ பகை கொண்டிருந்ததால ஒரு வயல் பிரச்சனையில எங்களப் போடியாரோட மோத வைச்சிப் போட்டான். அதனால ஒரு அசம்பாவிதம் நடந்து போச்சு. அத விபரிக்க நான் விரும்பல்ல. அது தொடர்பாக போடியார் பல வழக்குகளில மாட்டிக் கொண்டார். அத விட வேறு பல பிரச்சினைகளும், மகளுக்கு கலியாணம் கட்டினதும், வயல்கள் நட்டம் கண்டதுமாகச் சேர்ந்து பெரிய கடனாளியாகி,







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயும் பிடிச்சுப் போய்ச் சேர்ந்திட்டார். மகளும் ஏதோ நோயால செத்துப் போனாள். இந்த நிலயில கடன்காரனுகள் கோட்டுத் தீர்ப்புப் படி ஆதனம் எல்லாத்தயும் ஏலத்துல வித்துப் போட்டானுகள். தங்க ராசாவும் நீண்ட காலம் வருத்தமாக் கிடந்து காலமாக, மிஞ்சிய காணி கொஞ்சம் ஜீவரத்தினத்திற்கும், ராசரத்தினத்திற்கும் சொந்தமானது. பாவம் கொடி கட்டிப் பறந்த வாரித் தம்பிப் போடியாரோட குடும்பம் இப்பிடி அநியாயமாக அழிஞ்சி போச்சி. ஆனாலும் ராசரத்தினத்திற்கு, போடியான்ட பட்டம் இன்னும் அழியல்ல மற்ற எல்லாப் போடிமார்களும் எப்பிடியோ மண் மறைஞ்சித்தானுகள். வயதேறிக் கூன் விழுந்து போனாலும் இன்னும் வயலுல கூலி வேல செய்யிற ராசரத்தினம் போடியாரகத்தான் எல்லாராலயும் அன்பாக அழைக்கப்படுகிறது பெருமை தான். ஒரு காலத்தில என்னை பெரிய தம்பிக் கிழவர் எண்டு செல்லமாக் கூப்பிட்டு கேலி செய்த அவர், இப்ப என்னக் கண்டா 'ஐயா' எண்டு கூப்பிடுறது எனக்கு மனசுல ஏதோ செய்யுது.


வலையிறவுப் பள்ளியில படிக்கக்குள்ளயே எனக்குச் சில ஐயப்பாடுகள் இருந்திச்சி. ஆருட்ட கேக்கிறது? அம்மாட்டக் கேட்டன் "அம்மா, இந்த ஊரைத் திமிலைத் தீவெண்டு ஏன் சொல்லுறாங்க? இஞ்ச நாச்சி மாட்டுப் புள்ளையார், வலையிறவில மாணிக்கப் புள்ளயார், மடத்தடிப் புள்ளயார், புளியந்தீவில ஆனப்பந்திப் புள்ளயார், அமிர்தகழியில மாமங்கப் புள்ளயார் எல்லாமிரிக்க இங்க மட்டும் ஏன் ஒரு கிட்டினன் கோயில் வந்தது? அதுமட்டுமில்ல

பெரிய துறையில ஒரு கோயில் அழிஞ்சி கிடக்கே ஏன்?" இப்பிடி நான் அடிக்கிக் கொண்டேபோனன். அம்மா, திக்குமுக்காடிப் போனா. "இதெல்லாம் எனக்கெப்பிடித் தெரியம் மனே, நீ கொப்பாட்டக் கேளு" எண்டு சொல்லிப் போட்டு சோறாக்கிற குடிலுக்குள்ள போயிட்டா. அப்பா வந்ததும் இதே கேள்விகள அடுக்கினன். அவர் "பொறு" எண்டு சொல்லிப் போட்டு, முகம் கழுவித்து வந்தார். மத்தியானச் சோறு எனக்கும் தீத்தித் திண்டு போட்டு, சாய்மனைக் கதிரயிலருந்து ஆறுதலாகச் சொன்னார். அத அப்படியே சொன்னா பாரதமாப் போயிடும். சுருக்கிச் சொல்லுறன். திமிலர் எண்ட சாதியார் இருந்ததால இது திமிலத் தீவாச்சிது. காலகதியில 'ர்' நீங்கி திமிலத் தீவாச்சி. இப்ப திமிலைத் தீவெண்டு சொல்லுறாங்க. நயினாதீவை 'நயினை' எண்டுறது போல, நல்லூரார் 'நல்லை' எண்டுறது போல, இது 'திமிலை' இது ஒரு காலத்தில தீவாகத்தான் இருந்திச்சி. இப்ப இருக்கிற புள்ளயாரடி, ஊறணிப் பகுதி, ஒரு காலத்தில நீராக இருந்திரிக்க வேணும் அது பிற்காலத்தில மூடுப்பட்டு, மேடாகியிரிக்கலாம். அப்பிடியெண்டா, புளியந்தீவு, எருமைத் தீவெண்டுற பெரிய களம், மாந்தீவு போல, இது திமிலைத் தீவுக்குள்ள வலையிறவு, புதூர், பெரியதுறை, வீச்சுக்கல் முனை, சேத்துக் குடாவின்ட கிராமங்களோட திமிலத் தீவுக் கிராமமும் இருக்கி.

திமிலர் தலைவன் இருந்து இந்தப் பகுதிய ஆண்ட இடம் தான் இப்போதய திமித் தீவுக் கிராமம். நாகர், இயக்கர், திமிலர் எண்ட சாதியார் ஈழத்தில ஆதிக் குடிகள். நாகரையும், இயக்கரையும் அமானுசர் எண்டு ஆரியமாயக் கதைகள் சொல்லுற போல, மகாவம்சம் முதலான வரலாற்று அற்புத சம்பவக் கதைகளும் சொல்லுதுகள். ஆரிய பரம்பலக் காட்ட ராமாயணமும், மகாபாரதமும் கூட, ஆரியர் தான். மனிசர், திராவிடரான இலங்கையிட ஆதிக் குடிகள் அரக்கர் எண்டு சொல்லி அவர்களைக் கீழ்தரமாகக் காட்டுறதில வெற்றிகண்டிற்றுதுகள்.

திமிலத் தீவில அதிக காலம் தொட்டு வாழ்ந்த திமிலர்கள் தமிழர்கள் தான். அந்தச் சாரதாரண மக்கள் வலை கட்டி, மீன், றால் புடிச்ச இடம் வலையிறவு. அவங்க வலை வீசி மீன் புடிச்ச இடம் வீச்சுக் கல் முனை. அதுக்குப் பக்கத்தில இருந்த சேறு நிறைஞ்ச குடா திமிலத் தீவுல வடக்குப் பக்கத்தில அந்தக் காலம் குடிசனச் செறிவோட இருந்த இடம் பெரியதுறை. அதில டச்சுக்காரர் வாறதுகு முதல ஒரு கோயில் இருந்திச்சி. அது தான் சித்திர வேலாயுதர் சாமி கோயில். ஏதோ காரணத்தால அந்த ஊரும் அழிஞ்சி கோயிலும் அழிஞ்சி போச்சி. நான் சின்ன









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வயதில ராமய்யா அண்ணரோட அந்த அழிஞ்ச கோயிலுக்குக் கிழக்குப் பக்கமிருந்த தாமரைக் குளத்துக்குப் பூவாயப் போயிரிக்கன். அப்ப அந்தக் கோயில் அழிஞ்ச நிலையில சிற்பமெல்லாம் உடைஞ்சி கீழ உழுந்த நிலையில சூரப்பத்தயால மூடிக் கிடந்திச்சி. அந்த ஊரும் கோயிலும் ஏன் அழிஞ்சி போச்சி? சில பழைய ஆக்களிட்ட பட்டும் படாமலும் கிடச்ச தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு சிறு கதையை (அறுபதுகள் எண்டு நினைக்கிறன்) சுதந்திரனில எழுதினன். அது 'பாழடைஞ்ச கோயில்' எண்ட தலைப்பில வெளிவந்திச்சி.

ஆதி காலம் தொட்டு திமிலத் தீவில இருந்த ஆதிக் குடிகள் தான் திமிலர். அவங்க வந்தேறு குடிகளில்ல. அவங்கட தொழில் நாவாய் செலுத்துதல், மீன் பிடித்தல் போன்றவை தான். அவங்க சரியான பலசாலிகள். ஆயானுபாக தோற்றமுள்ளவங்க, அதனால தான் எத்தனை தடவ சண்டை போட்டும் முற்குகரால வெல்ல முடியல்ல. பட்டாணிகளுட உதவியோட அவர்களை வெண்டு திரத்த முடிஞ்சதெண்டத முன்னம் சொல்லியிரிக்கிறன். அதுக்குப் புறகு தான் முற்குகச் சாதியார் திமிலத் தீவில குடியேறி வாழ முடிஞ்சிது.

திமிலத் தீவில எப்படிக் கிட்டினன் கோயில் வந்ததெண்டுறத நான் 1958 ஆம் ஆண்டு "திமிலத் தீவு ஸ்ரீமகா விஷ்ணு ஆலயம்" எண்ட தலப்பில வீரகேசரியில எழுதியிரிக்கிறன் எண்டு நினைக்கிறன். புள்ளயார் வழிபாடு மட்டக்களப்பில பரவுறதுக்கு முதலே திமில தீவு கிட்டினன் கோயில் தோற்றம் பெற்றிருக்க வேணும். வாதாபி,சாளுக்கியரோட படையெடுப்போட தான் புள்ளயார் வழிபாடு தென்னிந்தியாவுக்கும் வந்ததாக படிச்ச ஒரு நெனைவு.



ஆனா முக்குவர் வந்த புறகு தான் திமிலத் தீவுக் கிட்டினன் கோயில் தோற்றம் பெற்றதெண்ட ஒரு கர்ண பரம்பரைக் கதையை வச்சித் தான் கிட்டினன் கோயில் வரலாற்றை நான் எழுதினன். அந்தக் கதையில திமிலத் தீவு நிலாமை வேலப் போடியாரோட மகன் மூத்தம்பி அங்கிருந்த ஒரு அரசங்கண்டருகில வந்து தங்கிய சாமியார், அந்த இருவருடைய ஆன்மீகத் தொடர்பு - கோயில் கட்டப்பட்டதையெல்லாம் குறிப்பிட்டிருந்தன். ஓலை குடிலாகத் தோன்றிய கோயில், புறகு கல்லால கட்டப்பட்டு, அழிஞ்சி, பிறகும் கட்டப்பட்டு கடைசியாக சின்னய்யா விதானயாரோட தகப்பன் வேலாப்போடி பூசாரியாரோட காலத்துல நிரந்தரமாகக் கட்டப்பட்டது. சின்னய்யா விதானயார் தற்கால நாடக முறையிலான திருவிழா முறையத் துவங்கி வச்சார் எண்டும் கூறியிருந்தார்.

கிட்டினன் கோயிலுக்கு முன்னால கிழக்கிலுள்ள சிறு வெளி பூமிய சின்னய்யா விதானயார் வாங்கின பிறகுதான் அந்தக் கோயிலுக்கு முன்னால வயல் வெளியில நாடகப் பாணித் திருவிழா நடக்கத் துவங்கிச்சி. அந்தப் பூமியிட முந்திய சொந்தக்காரர் முன்னம் நாம கண்ட வாரித் தம்பிப் போடியார் தான். அந்தப் போடியாருட பணக்கார ஆணவப் போக்கு சின்னஞ்சிறுசிலேயே என்னப் பாதிச்சது எண்ட சேதி உங்களுக்கும் தெரியும். சேற்றில தான் செந்தாமரை முளைக்கும் எண்டது போல அந்த ஆணவ முனைப்புள்ள குடும்பத்தில புறந்தவர் தான், பின்னாலில் மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் முழுவதுக்கும் பொறுப்பாகவிருந்து, கல்வி நெறிக்கும், ஆன்மீகத் துறைக்கும் வழிகாட்டின சுவாமிஜி ஜீவனானந்த மகராஜ் அவர்கள் என்பது வாசகர் பலர் அறிஞ்சிரிப்பிங்க. அதுததான் ஆணவ முனைப்பில ஒரு ஆன்மீக ஊற்று என்பது.



- தலைவருக்கு தேர்தல் பற்றி விழிப்புணர்ச்சியே இல்லையென்று எப்படி சொல்லுறீங்க?
- ஓட்டுகளைப் பிரிக்கணும் எண்டு சொன்னா தனக்குக் கூரையேறிய அனுபவம் நிறைய உண்டு எண்டு சொல்லுறார்

ஒருவர் : ஏம்ப்பா இப்படி பிக்பாக்கெட் தொழில் பண்ணறே ? ஏதாவது ஒரு லட்சியத்தை வெச்சுக்கிட்டு உழைக்க வேண்டியதுதானே?

மற்றவர்: என்னங்கையா இப்படிக் கேட்கறீங்க ? ஒரு நாளைக்குக் குறைஞ்சது அஞ்சு பர்சையாவது அடிக்கணும்ங்கறதுதானே என்னோட லட்சியமே









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு ஜூலை நினைவுகள்

# 25 ஆண்டுகள்








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**நேற்று நீண்ட நாளைக்குப் பின்னர் எனக்கு ரயில் பயணம் கிட்டியது. கொஞ்சம் சீக்கிரமாகவே எழுந்து ஸ்ரேசன் சென்று இருக்கை நிறையாத ரயில் பிடித்து யன்னல் ஓரமாக இருந்து, குப்பென்று எதிர்த்திசை நகரும் காற்று முகத்தில் அடிக்க, கையோடு எடுத்துப் போன புத்தகத்தை இதழ் பிரிக்க ஆரம்பித்தால், சுற்றும் முற்றும் இருக்கும் ஐபொட் காதுகளும், உலக நடப்புக் குசுகுசுப்புக்களும் ஒரு பொருட்டாகவே இருக்காது. கதாசிரியன் கைபிடித்துப் போகும் இன்னொரு உலகத்துக்குப் போய்க்கொண்டிருக்கும் மனசு. அந்த வாய்ப்புத் தான் நேற்றுக் கிட்டியது.**

# கிடுகுவேலியும், ஒரே கடலும்..!


**கானா பிரபா**



**தாயகம்** சென்றபோது வாங்கி வந்த புத்தக அடுக்குகளில் செங்கை ஆழியானின் "கிடுகு வேலி" நாவலை முன்னுரையில் இருந்து தொடர்ந்தேன்.

முன்னர் என் ஆதர்ஷ எழுத்தாளர் செங்கை ஆழியான் பற்றி நான் உங்கள் ரசிகன் என்ற பதிவை எழுதியபோது கிடுகுவேலி வாசிப்பனுபவம் பற்றிச் சொல்லியிருக்கின்றேன். எனது அம்புலிமாமா, பாலமித்ரா காலத்து உலகத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டு போனது இந்தக் கிடுகுவேலி நாவல். ஈழநாடு வாரமலரில் ஒவ்வொரு ஞாயிறுப் பதிப்பிலும் தொடராக வந்தபோது அந்தப் பக்கத்தைக் கிழித்து ஒரு பெரிய கைவினைக் கொப்பியில் ஒட்டிச் சேமித்து வைப்பேன். கல்கி, ஆனந்த விகடனில் வரும் தொடர்கதைகளைச் சேர்த்து பைண்ட் பண்ணி வைக்கும் என் அம்மாவின் பழக்கம் தான் எனக்கும் அப்போது தொற்றிக் கொண்டது. பெரியாக்கள் வாசிக்கும் கதை என்ற இலக்கணத்தை முதன் முதலில் காட்டியது இந்தத் தொடர் நாவல் தான். என் ஆரம்பகால வாசிப்பு இது என்பதால் நாவலின் கரு மட்டுமே இது நாள் வரை என் நினைவில் இருந்தது. நேற்றைய மீள் வாசிப்புத் தான் மீண்டும் எனக்குப் பழைய வாசிப்பைப் புதுப்பித்துத் தந்தது.

செங்கை ஆழியானின் படைப்புக்கள், அவை நாவலாகட்டும் அல்லது சிறுகதைகளாகட்டும் அந்தந்தக் காலகட்டத்து ஈழச் சமூகத்தின் காலப்பதிவுகளாக இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பல உதாரணங்களை இவரின் படைப்புக்களை வைத்தே கூறலாம். அதாவது இவரின் ஒரு படைப்பை வாசிக்கும் ஒரு வாசகனுக்கு வரலாற்றின் எந்தக் காலகட்டத்தில் எந்த வகையான வாழ்வியல் அமைப்பில் ஈழத்தமிழன் இருந்தான் என்பதை அது காட்டி நிற்கும். பொத்தம்பொதுவாக ஒரு குடும்பச் சிக்கலைச் சொல்லுவதாக அவை அமைந்து நிற்காது. ஈழத்தமிழரின் அரசியல் வரலாற்றுப் பின்னணியில் ஏராளமான ஆய்வு நூல்கள் வந்திருக்கின்றன. ஆனால் ஈழத்தமிழரின் அலைக்கழிக்கப்பட்ட வாழ்வியல் வரலாற்றை அறிந்துகொள்ள வேண்டுமென்றால் செங்கை ஆழியான் போன்றோரின் தேர்ந்தெடுத்த நாவல்களைப் படிக்க ஆரம்பித்தாலே போதும். அந்தவகையில் கிடுகுவேலி நாவல் பேசும் காலம் 1980 களின் காலகட்டத்து யாழ்ப்பாணத்து வாழ்வியல் அமைப்பு.

ஈழத்தில் இருந்து ஆரம்பகாலத்தில், அதாவது அறுபதுகளுக்குப் பிந்திய காலம் முதல் பொருளாதார வலுவை ஏற்படுத்திக் கொள்வதற்காகப் பலர் தமது வீடு, காணி போன்றவற்றை ஈடுவைத்து வெளிநாடுகளுக்குப் போக ஆரம்பித்தார்கள். தமது பெற்றோர் இறக்கிவைத்த பாரங்களாக எஞ்சி நிற்கும் நாலைந்து சகோதரிகளோடு பிறந்த ஒருவன் இவர்களுக்குச் சீதனம், சீர் செய்ய உள்ளூர் உழைப்பை நம்பியிருக்கமுடியாது. ஆயிரத்துக்கும் குறைவான சம்பளம் வாங்கிக்கொண்டு நாளாந்த சீவியத்தை நடத்துவதே பெரிய காரியம். இதனால் தான் கௌரவமான உத்தியோகத்தில் இருந்தவர்கள் கூடத் தம் பதவியை உதறிவிட்டு மத்திய கிழக்கு நாடுகளுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் பயணித்தார்கள். அதாவது தாயகம் கொடுக்கும் சின்னச் சின்னச் சந்தோஷங்களையும் அடகு வைத்துத் தம் குடும்பத்துக்காக உழைத்து உழைத்து நரைதட்டி, வழுக்கை விழுந்து அரைக்கிழவனாகி, கல்யாண வயது தாண்டி கல்யாணமே கட்டாமல் வாழும் பலரை நான் பார்த்திருக்கின்றேன், அறிந்திருக்கின்றேன்



.

இப்போது அகதியாக ஓடும் தலைமுறைக்கு முந்திய காலம் அப்படியிருந்தது. இப்போது எல்லாமும் கலந்த ஒரு இடப்பெயர்வாகிவிட்டது.


"கிடுகு வேலி" நாயகன் சண்முகம் கூட அன்றைய யாழ்ப்பாணத்துச் சராசரி இளைஞன். அதாவது கிராமத்தின் மதகு, ஆலமரத்தடி, வாசிகசாலை, மருதனாமடச் சந்தி என்று சுற்றும் இருக்க, சைக்கிளில் ஏறி மண் ஒழுங்கையில் ஓடி, மதகில் ஏறி உட்கார்ந்து, நண்பர்களுடன் அரட்டை அடித்து, கீரிமலைக்குச் சென்று கூவில் கள் குடித்து.. என்று தன் எல்லாச் சந்தோஷங்களையும் அடகுவைத்துவிட்டு குவைத்துக்குப் போய் ஊருக்குத் திரும்பாமல் ஐந்து வருடங்கள் மாடாய் உழைத்து தன் குடும்பம் கரைசேர நினைத்தான்.

புதிதாகக் கல்யாணமாகி மூன்றே மாதங்களில் மனைவி நிர்மலாவையும் பிரிந்து மூன்று தங்கைகளையும், ஒரு தம்பியையும் கரை சேர்க்கவேண்டும் என்ற முனைப்பில் நாடு விட்டு ஓடும் சண்முகம் தன்னுடைய உழைப்பின் பலாபலன்கள் எப்படி இருக்கின்றன என்பதைக் காணும் போது அவனுக்குக் கொடுக்கும் ஏமாற்றங்கள் தான் இக்கதையின் களம்.

கிடுகுவேலி என்பது யாழ்ப்பாணத்தின் ஒரு குறியீட்டுப் பெயர், அந்தக் கிடுகுவேலியின் நேர்த்தியில் தான் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் இருக்கின்றன. ஆனால் திடீர் வெளிநாட்டுப் பணமும், அதீத நாகரீக மோகமும் எப்படியெல்லாமோ இந்தக் கிடுகுவேலிக் கலாசாரத்தைச் சிதைத்துவிடுகின்றன. வெளிநாட்டில் அரைவயிறு கால் வயிறு நிரம்ப, இரண்டொரு மணி நேரத் தூக்கத்தோடு இரண்டு மூன்று வேலை செய்து ஒருவன் தான் வாழ்வை இழந்து கொண்டு போகின்றான். மறுபுறத்தின் அவன் உடன்பிறப்புக்கள் இரண்டு மடங்கு உச்சபட்ச வாழ்வுக்குள் போகின்றார்கள். இப்படியான சண்முகங்களின் குடும்பங்கள் பல இன்னும் நம் நாட்டில்.

இந்த நாவலுக்கு முன்னுரை அளித்த பேராசிரியர் சிவலிங்கராஜா சொல்லுவது போல்..

"பணம் வந்ததும் குணம் மாறித் தனது மைத்துனனை இழக்கும் கிளிகளையும், மற்றவனையும் ஒரு மாதிரி வெளியே அனுப்பி மற்ற மகளுக்கும் மாப்பிளை வேட்டையாட நினைக்கும் சண்முகத்தின் தாயும் இன்றைய சமூகத்தின் வகைமாதிரியான பாத்திரங்களாகும். இவை மாறலாம், மாற வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனால் இப்படியானதொரு சூழ்நிலை யாழ்ப்பாணத்திலேயே நிலவுகிறது என்பதைப் படம் பிடிக்கக் கிடுகுவேலி போன்ற நாவல்கள் தேவைப்படுகின்றன".

வெளிநாடு போன சண்முகத்தின் கோணத்தில் நாவலை நகர்த்தி வாசகனை, சண்முகத்தின் பார்வையில் நாவலோட்டத்தை அனுபவிக்க வைக்கின்றார் நாவலாசிரியர். தன் குடும்பம் தானே, நான் தானே காப்பாற்றவேண்டும் என்ற அவனின் மனோபாவம், தொடர்ந்து அவன் சந்திக்கும் நிகழ்வுகளால் தவறாகிப் போகின்றது. அதுபோல் ஆரம்பத்தில் திமிர்பிடித்தவள் போலச் சித்திரிக்கப்படும் சண்முகத்தின் மனைவி நிர்மலா, திருமணமான மூன்றாம் மாதமே தன்னைத் தவிக்கவிட்டும், ஐந்து வருடங்களாக பிள்ளையின் முகத்தைப் பார்க்காத தந்தையாக சண்முகம் இருப்பதையும், தன்னையும் பழைய காதலன் பகீரதனையும் இணைத்து ஊரார் பேசும் குசுகுசுப்புக்களையும் தாங்கி வாழவேண்டியவள் என்று காட்டும் போது அனுதாபத்துக்குரிய பாத்திரமாக மாறுகின்றாள். எனவே ஒரு கதாபாத்திரத்தின் பார்வையில் கதையை நகர்த்தாமல், காட்சிகளும் சம்பவங்களும் ஒரு பொதுவான தளத்தில் இருந்து பார்க்கும் வண்ணம் நாவலை எடுத்துச் சென்றிருக்கின்றார் செங்கை ஆழியான்.


ஐந்து வருடங்கள் கழித்து ஊருக்கு வரும் சண்முகத்தின் பார்வையில் கிடுகுவேலிகள் தொலைந்த மதில்களும், கல்வீடுகளும், வீடுகள் தோறும் முளைத்திருக்கும் ரீவி அன்ரெனாக்களும் என்று வெளிநாட்டுப் பணத்தின் சித்துவிளையாட்டுக்கள் பேசப்படுகின்றன.


தன் வீட்டுக்காரர்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள், கஷ்டப்பட்டுச் சேர்த்த பணத்தைச் சேமித்து வைத்திருப்பார்கள் என்ற நினைப்பில் இருக்கும் சண்முகம் காணும் நாகரீக மாற்றங்கள் அவனை அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றன. எந்த நோக்கத்துக்காகத் தன்னையே அவன் இழந்தானோ அவனின் கனவுகள் எல்லாம் பொடிப் பொடியாகின்றன.

மச்சாள் பவளம், மற்றும் நிர்மலா போன்ற பாத்திரங்கள் இந்தச் சமூக அமைப்புக்குள் இருந்து வெளியே வரமுடியாதவர்களாக தாம் விரும்பியவனையே திருமணம் செய்துகொள்ள முடியாத அபலைகளாக காட்டப்படுகின்றார்கள்.

அதுபோல் அத்தான் சீராளனையே மனதில் வரிந்துகொண்டிருக்கும் சண்முகத்தின் தங்கை கிளி, திடீர் வெளிநாட்டுப் பண மாயையில் அவனை ஒதுக்குவதும் கூட கசப்பான நிஜவாழ்வில் குறியீடுகளே.








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



குவைத்தில் தன்னோடு வேலை-பார்க்கும் சுப்பிரமணியம் வருடத்தில் பதினைந்து நாளாவது ஊருக்குப் போய் தன் குடும்பத்துடன் விடுமுறையைக் கழித்து வருவதும் சண்முகத்துக்கு ஏளனமாகப்படுகின்றது.

"எப்படித்தான் வாழ்ந்தாலும் மனைவியுடன் வாழ்வது போல் எதுவுமில்லை. உணர்வுகளையெல்லாம் ஒடுக்கி அடக்கி எனக்காகக் காத்திருக்கும் அவளுடன் வருடத்தில் ஒரு சில நாட்களாவது வாழாவிட்டால் பிறகெதுக்கடா சண்முகம் பணம்?..."

சுப்பிரமணியத்தின் அந்த வார்த்தைகள் ஊருக்குத் திரும்பியபின் தான் சண்முகத்தைச் சுடும் நிஜங்களாகின்றன. திருமணம் முடித்து மூன்றே மாதங்களில் மனைவியைப் பிரிந்து, அவளின் அபிலாஷைகளை ஒதுக்கித் தன் குடும்பத்தைக் கரைசேர்க்க ஓடியதை நினைத்து வருந்துகின்றான்.

கிரைண்டர், ரேப் ரெக்கோடர், ரீவி, ரெக் என்று பட்டியல் போடும் தங்கைகள், தன் உழைப்பைச் சேமிக்காமல் ஆடம்பரமான வீட்டைக் கட்டிய அம்மா, "தம்பி எப்ப வந்தது? இனி எப்ப போறது?" (பக்கத்து வீட்டு செல்லப்பர்), "ஊரெல்லாம் மாப்பிளை இருக்குது தம்பி, ஆனா அவங்களை வாங்க முடியாது, ஒவ்வொருத்தனின்ர ரேற்றும் வானத்தை எட்டுது" (வேலுப்பிள்ளை அம்மான்), இவர்கள் எல்லாம் நம் சமூகத்தில் வாழும் குறியீடுகள். சேமித்த காசெல்லாம் கரைந்து போய் இன்னொரு வெளிநாட்டுப் பயணம் தான் தன்னுடைய இன்னொரு தங்கையைக் கரைசேர்க்கும் என்ற நிலையில் இருக்கும் சண்முகத்துக்கு ஆறுதலாக, சீதனமில்லா மாப்பிள்ளையாக வரும் முருகானந்தம் போலவும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

1983 இல் திருநெல்வேலியில் நடந்த இராணுவ டிறக் மீதான தாக்குதலோடு கதையின் இறுதி முடிவு நகர்வதும், செங்கை ஆழியான் கதைகளில் பெரும்பாலான முடிவாக இருக்கும் அவலச் சுவையும் இந்த நாவலின் திருப்பத்துக்கும், முடிவுக்கும் கைகொடுத்திருக்கின்றனவே ஒழிய



மற்றப்படி இவை செயற்கையான உள்ளீடுகளாகவே இருக்கின்றன. யாழ்ப்பாணத்தின் பல்வேறு பிரதேசத்தில் வாழும் மக்கள் வாழும் மக்களின் பேச்சுவழக்கில் நுணுக்கமான வித்தியாசம் இருக்கும். ஆனால் அதீத இலக்கணத் தமிழ் இருக்காது. ஆனால் செங்கை ஆழியான் நாவல்களில் இந்த பேச்சு வழக்கை பாத்திரங்கள் வாயிலாகச் சொல்லும் போது இலக்கணத் தமிழை விடுத்து முழுமையான பேச்சு வழக்கிலேயே நகர்த்தியிருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். அதைத் தான் கிடுகு வேலிக்கும் சொல்லிக் கொள்ள வேண்டும்.



1984 ஆம் ஆண்டு ஜூனில் முதற்பதிப்பாக ரஜனி பதிப்பகம் வெளியிட்ட இந்த நாவல் நான்காம் பதிப்பாக ஏப்ரல் 2003 இல் கமலம் பதிப்பகம் வெளியிட்டிருக்கின்றது. 1983-1985 ஆண்டுகளில் இலங்கையில் வெளியாகிய குறுநாவல்களுள் சிறந்ததாகக் "கிடுகுவேலி"யைத் தேர்ந்தெடுத்து தமிழ்க் கலைஞர் வட்டம் (தகவம்) பரிசும் சான்றிதழும் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

ஒரு நாவல் என்றால் முன்னூறு நானூறு பக்கங்களில் இருக்கவேண்டும் என்ற சிலரின் எழுதப்படாத விதிகளை மீறி, 96 பக்கங்களோடு அங்கிங்கு அலைந்து திரிந்து போகும் தொடராக அல்லாது "கிடுகு வேலி" சொல்ல வந்ததைச் சொல்லி நிற்கின்றது.

தொடரும்



- எங்கட அம்மாவுக்கு டயபற்றிக்ஸ் இருக்கிற விஷயம் என்ர மனைவிக்குத் தெரியாது..
- ஏன் தெரிஞ்சா கவலைப்படுவாவா..?
- இல்லை... நிறைய இனிப்புச் சாப்பாடு செய்து கொடுத்துடுவா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னல்களைப்

## புதிய அரசியல் கட்சி தீர்த்து வைக்குமா?

வீதி வசதியில்லை நீர் வசதியில்லை வீட்டு வசதியில்லை. போக்குவரத்து வசதி சீராக இல்லாமையினால் பிள்ளைகள் ஒழுங்காகப் பாடசாலை செல்ல முடியாமல் உள்ளது. எங்களுக்கு எந்தவித வசதியுமில்லை. வந்த மாதிரியே இன்னமும் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்று தனது அன்றாடக் கஷ்டங்களைப் பகிர்ந்து கொண்டார் ஏ.ஷாகுலா. கணவனை யிழந்த இவர் தனது பாடசாலை செல்லும் இரண்டு பிள்ளைகளுடன் புத்தளத்தில் உள்ள சோல்ற்றன் 2 என்னும் அகதி முகாமில் கடந்த 18 வருடங்களாக வாழ்ந்து வருகின்றார்.

புத்தளம் வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள ஓர் கரையோரப் பிரதேசமாகும்.

முஸ்லிம் மக்கள் 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வசித்து வந்த இந்த மக்களை தத்தமது இடங்களை விட்டு வெளியேறுமாறு கோரப்பட்டது. இவர்கள் தம்முடன் பணத்தையும் உடைமைகளையும் எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டது. இவ்வாறு தமது வீடு வாசல்களை விட்டு வெளியேறிய மக்கள் படகு, பஸ், ட்ரக்டர் மூலமாகப் புத்தளம் மாவட்டத்தை வந்தடைந்தனர். பல்வேறு நிறுவனங்கள் அங்கு பல அகதி முகாம்களை நிறுவி அவர்களை அங்கு குடியேற்றினர்.

இவர்களில் பலர் இன்னமும் அகதி முகாம்களிலேயே பல இன்னல்களைச் சந்தித்த வண்ணம் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த பலர் தில்லையடியில் வாழ்கின்றனர். இப்பகுதி விற்றில் ஜவ்னா அல்லது சிறிய யாழ்ப்பாணம் என்றழைக்கப்படுகின்றது. மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கும் மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கும் இடையே வழங்கப்படும் உதவிகளில் பாரபட்சம் காட்டப்படுவதாக யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் கூறுகின்றனர். அத்துடன் தாங்கள் யாரும் கவனிப்பாரற்ற ஓர் சமூகமாக இருப்பதாகவும் இவர்கள் கருதுகின்றனர். நாங்கள் பல கஷ்டங்களுடன் இன்னமும் அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எங்களுக்கு உலர் உணவு ஒழுங்காகக் கிடைப்பதில்லை. தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதில் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எமக்கு 1630 ரூபாவிற்கு சமமான உலர் உணவு 18 வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டது. இன்றும் அதே தொகைக்குரிய உலர் உணவே வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. நாங்கள் ஓர் ஒழுங்கான அரசியல் தலைமைத்துவமின்றி அரசியல் அநாதைகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்று சிறிய பலசரக்கு கடையொன்றைத் தனது சிறிய குடிசைக்கு முன்னால் நடத்தி வரும் எஸ். எச். மன்சூர் கூறினார். யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமக்கு இதுவரை சரியான தலைமைத்-



| புத்தளம் சனத்தொகை பரம்பல் | |
|---|---|
| சிங்களவர் | 585000 |
| முஸ்லிம் | 149000 |
| தமிழர் | 80000 |
| மொத்தம் | 814 000 |
| இடம்-பெயர்ந்தோர் | 75000 |

புத்தளம் பிரதேச செயலகம்

துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவம் அமையவில்லை என்று ஆதங்கப்படுகின்றனர். இதன் அடிப்படையில் அண்மையில் உருவான புதிய அரசியல் கட்சியே மக்கள் மறுமலர்ச்சி முன்னணி. யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 21 உறுப்பினர்கள் கடந்த மாதம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இந்தக்கட்சியில் உறுப்பினர்களாக உள்ளனர்.


யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளின் அவசியத்தை அகதி முகாம்களில் வாழுகின்ற மக்கள் உணர்கின்றனர். ஏனைய பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் பல வாக்குறுதிகளை வழங்கித் தம்மைப் பல தடவைகள் ஏமாற்றி விட்டதாக இந்த மக்கள் கருதுகின்றனர். எமது மக்கள் பல உரிமைகளை இழந்து விட்டனர். அவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி அவர்கள் இழந்த உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொடுக்க விரும்புகின்றோம். அத்துடன் அவர்களை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தி அவர்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளையும் செய்யவுள்ளோம். புதிய அரசியல் கட்சியொன்றை நிறுவுவதற்கு மேற்கூறியவை காரணமாகும். இவ்வாறானதொரு கட்சியைப் 10 அல்லது 15 வருடங்களுக்கு முன்னரே ஆரம்பித்திருக்க வேண்டும் என்று மக்கள் மறுமலர்ச்சி முன்னணியின் தலைவரான எம்.எம்.குத்தூஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற மாவட்டங்களிலிருந்து சுமார் 20000 மக்கள் வெளியேற்றப்பட்டனர். இவர்களின் எண்ணிக்கையானது தற்பொழுது இரட்டிப்பாகியுள்ளது. இவர்களின் தேவைகளும் இரட்டிப்பாகியுள்ளன. தற்பொழுது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தசுமார் 15000 பேர் தம்மை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இவ்வாறானதொரு புதிய அரசியல் கட்சி அவசியம் எனப் புத்தளத்தைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டுள்ள சிலர் கூறுகின்றனர். பெரும்பான்மைக் கட்சிகள் சேர்ந்து போட்டியிடுவதால் பல தீமைகள் ஏற்படுவதாகக் கருதப்படுகின்றது.

பெரும்பான்மைக் கட்சிகளுடன் சேர்ந்து சிறுபான்மைக் கட்சிகள் தேர்தலில் போட்டியிடும் போது அந்தச் சிறுபான்மைக் கட்சியினருக்கு பல அநீதிகள் இழைக்கப்படுகின்றன. இதனைக் கருத்திற் கொள்ளும் போது இவ்வாறு உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கென ஒரு கட்சியை ஆரம்பிப்பது சிறந்தது என்றார் புத்தளம் பெரிய பள்ளிவாசலின் பிரதம தர்மகர்த்தாவான எஸ். ஆர். எம். முஸம்மில். எனக்கு மீண்டும் யாழ்ப்பாணம் சென்று வாழ்வதற்கு விருப்பம். அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட புதிய கட்சியினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவார்கள் என்றால் நான் மீண்டும் யாழ்ப்பாணம் செல்வதற்கு விரும்புகின்றேன் என எம். நதீரா கூறினார்.

இவ்வாறு அகதி முகாம்களில் அல்லற்படும் மக்களின் அன்றாட அடிப்படைத் தேவைகளையாவது புதிய அரசியல் கட்சி பூர்த்தி செய்யும் என்பது இன்றும் அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பலரதும் நம்பிக்கையாகும்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரையும் பஸ்ஸில் வீரிடும் பயம்



**பவித்திரா வரவேஸ்வரன்**

**நேரமாகியும் கல்கிஸ்ஸை நோக்கிச்செல்லும் 155 ஆம் இல. பஸ் வண்டியைக் காணோமே என்ற எரிச்சல் ஒரு புறமிருக்க காலையில் பார்த்ததற்கு இன்னும் என் ஒரு வயதுக் குழந்தையின் மழலைமொழி கேட்கவில்லை என்ற ஏக்கம் மேலோங்கத் தொடங்கியது. பஸ் வந்ததும் ஒருவாறாக ஏறிக்கொள்வதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது.**

**பஸ்கட்டண** உயர்வு வேண்டி தனியார் பஸ் ஊழியர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் நெரிசல் வழமைக்கு மாறாக அதிகம். என்னைப்போல அலுவலகம் முடித்து வருவோர், ஏனையவர்கள், என்று ஏராளமான பயணிகள் பஸ்ஸின் உள்ளே இருக்க இடமும் இன்மையால் நின்றவாறே என் பயணம் தொடர்ந்தது. சரி நெரிசலான இப்பயணத்தை சற்றே ரசிக்கலாம் என்று மனம் சொல்லியது. நான் நின்று கொண்டிருப்பதற்கு சற்று முன்னே இருக்கையில் இருந்த பாட்டியின் கையில் செலுலர் போன் மேடையில் மைக் வைத்துப்பேசுவது போன்றிருந்தது.

"இல்லைப் பாருங்கோ என்ட மகன் Australia PR. கொஞ்சம் படிச்ச பெண்ணாத்தான் வேணும். வரதட்சணை என்று பெரிசா எதையும் எதிர்பார்க்கல. 10 பவுண் நகையும் ,கொழும்பில ஒரு வீடும் இருந்தா போதும்..."

அடடா அம்மாமார் இப்பெல்லாம் தங்கள் பிள்ளைகளுக்கு தரகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் வரன் பார்ப்பதை விட்டு-விட்டு cellpone Internet,e-mail என்று ஆரம்பித்து விட்டினம் போல. ஆனாலும் அந்த அம்மையார் மேல ஒரு அனுதாபம்

"சில நேரம் வெள்ள வான்காரர் அம்மையாரின் கதையைக் கேட்டு விட்டால்?"

அட மற்றப்புறம் இளம் யுவதியின் கையில் அதே செலுலர்போன். ஆனால் யாருடனும் கதைப்பதாகத் தெரியவில்லை. உதடுகள் அசைவது மட்டுமே விளங்கியது.

கண்கள் பஸ்ஸின் இறுதி இருக்கையை நோக்கிப்பயணித்தன. அங்கு ஒரு இளம் காதலர்கள். இருவரின் கைகளும் கால்களும் அழகாக மாப்பிசைந்தன. "ஹோட்டல்லில் வேலை செய்பவர்களோ"

பஸ்ஸில் கேட்ட மழலையின் அழுகை என் செல்லக் குட்டியை ஞாபகப்படுத்தின. போகும் போது மறக்காமல் anchor வாங்கணும். விலை ஐநூறு தாண்டி விட்டதென பிஞ்சுக் குழந்தைக்குத் தெரியுமா என்ன. வருடாந்தம் சம்பளத்தொகை உயர்கிறதோ இல்லையோ நாளாந்தம் விலைகள் ஏறத் தவறுவதில்லை.

ஒருவாறாக தெஹிவளையை பஸ் எட்டிய போது நெரிசல் குறைந்தது. இருக்க இருக்கையும் கிடைத்தது. ஒருவாறாக அமர்ந்து கொண்டேன். " இந்நேரம் அவர் வீட்டை போயிருப்பாரோ" செல்போன் ஒலித்தது.

"இங்கப்பா நான் வந்திட்டன் யோசிக்காம வாரும்" கணவனின் குரல் சற்று அமைதியைக் கொடுத்தது. அப்பாடா என்று மனம் நினைத்த போது பொதிகள் வைக்கும் இடத்தில் ஒரு கனத்த பை. மனதில் இருந்த பயம் இயல்பாகவே கனத்தது. யாரேனும் அதற்கு உரிமைகோருகிறார்களோ என்று கண்கள் பஸ்ஸிலிருந்த பயணிகளை நோட்டம் விட்டன. ஒருவாறாக எல்லாம் விதிப்படி என்று கடவுளிடம் பாரத்தை இறக்கிவிடுகிறேன். என் பஸ் பயணம் தொடர்கிறது. இது என்ன புது விடயமா? தொடர் கதைதானே.





# வாசகர் கணைகள்

ஐயா உமது சஞ்சிகையின் கொள்கை என்னவென்பதைச் சொல்லி விடும். ஏதோ முற்போக்கான புதுக் கருத்துக்கள் வருகின்றனவென்று நம்பி நாம் ஒவ்வொரு மாதமும் 100 ரூபாயை வீணாக செலவழிக்கவேண்டாமே.

கடந்த 05.07.08 இருக்கிறம் இதழில் பிரசுரமான வாசுகி ஆனந்தனின் "நீ நான்..." சிறுகதையைத்தான் சொல்கிறேன். பழங்காலத்து ஆணாதிக்க சிந்தனையைத் திரும்பிக் கக்குவதை சிறுகதை என்று பெயரில் தந்திருக்கிறீர்.

மலடி என்ற பட்டப்பெயரைச் சுமந்து கொண்டு மனதளவில் சித்திரவதைப்படும் பெண். அவள் கணவனும் அவளைக் கவனிக்காது புறக்கணிக்கின்றான். குறைந்த பட்சம் எந்த இடத்துக்குப் போகிறான் எதற்குப் போகிறான் என்று சொல்லக்கூட அவனுக்கு முடியவில்லை. அவனுடைய ஃப்ரண்ட்தான் அவளுக்கு ஆறுதல் கூறி அவள் அழகை இரசித்து அவளுக்குத் துணையாக நேரம் செலவழிக்கின்றான். அவன் கட்டிப் பிடிக்க வரும்போது ஒரு கண நேரம் தன்னை மறந்து அவன் பிடிக்குள் சுகம் கண்டு விட்டேனே என்று கதாநாயகி குற்றம் நெஞ்சில் குறுகுறுக்க அழுவது என்னய்யா நியாயம். திரும்ப பழங்காலத்து ரிஷி பத்தினிகள் கதைக்கு எங்களைக் கொண்டு போவதுதான் திட்டமா?


பெண்களைப் போட்டு இப்படி கொடுமைப்படுத்துவதை எப்பொழுது ஐயா விடுவீர்? ஏன் அவள் ஃப்ரெண்ட் சந்துருவோடு சுகம் கண்டால்தான் என்ன. அவளுக்கும் உணர்வுகள் இருக்கு. மனைவி என்று வந்துவிட்டால் ஒரு கணவன் அவள் தேவைகளை வெகு கவனமாகப் பூர்த்தி செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அதன் பிரதிபலனை அனுபவித்தே தீரவேண்டும். குற்றம் எங்கோ இருக்க அப்பாவிப் பெண்களைத்தானா நீர் குற்றஞ்சாட்டுவீர்? அதுசரி, வெளியூர் போன கணவன் திடீரென மனம் மாறி வருகிறான். ஏதோ புது விஷயம் சொல்லப்போவதாக போனில் சொல்லுகிறான். ஏன் அவன் மனம் மாறினான், என்ன விஷயம் சொல்ல வந்தான், என்று ஒன்றுமே கதையில் இல்லை. சும்மா சொதப்பல் கதைகளையெல்லாம் போட்டுப் பக்கங்களை நிரப்பி எங்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாதேயும் ஓய்.

கவிதா
ஹம்டன் லேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண், பெண் நட்பில் புனிதம் வேண்டும்!



பிருந்தா

## வேலைக்குச் செல்லும் பெண்களின் பார்வைக்கு..

**பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை ஆண், பெண் நட்பு மலருகின்றன. தொடர்கின்றன. இந்த நட்பு சிலரின் திருமணத்திற்கு பின்னும் தொடரும். முதலில் நட்பு என்பது என்ன என்பதை அறிந்து கொள்ள வெண்டும். இதில் ஒரு புனிதம் இருக்கிறது.**

**உண்மையான** நண்பன் தன் சக நண்பன்/நண்பி வாழ்க்கையை உயர்வடைய செய்வான். அவர்களுடைய வெற்றியை தன்னுடைய வெற்றியாக எண்ணி மகிழ்வான். இன்ப துன்பங்களில் பங்கேற்பான். நல்ல ஆலோசனை வழங்குவான். தீய வழியில் செல்ல விட மாட்டான். அதனால் தான் தோள் கொடுப்பான் தோழன் என்கின்றனர். இதே நேரம் சிலர், நண்பர்கள் என்ற போர்வையில் சில சுயநல வாதிகளும் இருப்பதை நாம் காண்கிறோம். அதனால் தான் வீட்டுப் பெரியோர்கள் இப்போது தங்கள் பிள்ளைகளை எச்சரிக்கின்றனர். அடுத்து ஆண் - பெண் நட்பு எதுவரை என்று பார்ப்போம். இதனால் ஏற்படுகின்ற விளைவுகள் என்ன? அதனை சமாளிப்பது எப்படி என பார்ப்போம். பொதுவாக ஆண் பெண் நட்பு வரையறைக்குட்பட்டே இருக்க வேண்டும். அது அந்தக் காலம் இந்தக் காலம் என்றில்லை. எந்தக் காலத்திற்கும் பொதுவானது. பெரும்பாலும் ஆண் பெண் நட்பு தங்களுடைய திருமணத்திற்கு பின் குறைவடைகிறது. உயிருக்கு உயிரான நட்பு கூட திருமண பந்தத்தின் பின் குறைந்து விடுகின்றது. இதற்கு காரணம் ஒரு பெண் தன்னுடைய திருமணத்திற்குப் பின் தன் ஆண் நண்பர்களுடன் பேசுவதென்பதே பெரிய விடயம். தன்னுடைய கணவனுக்கு பிடிக்குமோ, கணவன் வீட்டார்கள் என்ன சொல்வார்களோ, குறிப்பாக சமுதாயத்திற்காக தன்னுடைய நட்பை இழக்கிறாள். இதே போல் தான் ஆணுக்கும் நிகழ்கிறது.திருமணத்தின் பின் தன்னுடைய ஆண் நண்பர்களுடன் தொடரும் நட்பு பெண் நண்பிகளுடன் தொடர முடியாதுள்ளது. அவ்வளவு தூய்மையான நட்பாக இருந்த போதிலும் அது நிறுத்தப்படுகிறது. உங்களுடைய நட்பு திருமணத்திற்கு பின்னும் தொடர வேண்டுமாயின்.. உங்களது திருமணத்தின் போதோ.. திருமணம் நிச்சயிக்கப்படும் போதோ.. உங்கள் துணையிடம் நண்பர்களை அறிமுகம் செய்து வையுங்கள். அதில் அவரினால் உங்களுக்கு கிடைத்த பயன்கள் மற்றும் நன்மை தீமைகளில், குடும்பத்தினர்களுடன் உள்ள பழக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்பான அனைத்தையும் தெரிவியுங்கள். இதன் மூலம் உங்கள் துணையையும் அவருடனோ /அவளுடனோ நட்புறவுடன் இணைய விடுவது நல்லது. எந்த ஒரு விடயமும் தனிப்பட்ட முறையில் நண்பர்களான நீங்கள் மாத்திரம் கதைக்காமல் உங்களது கணவனையோ மனைவியையோ அவரையும் உங்களுடன் சேர்த்து வைத்து கதையுங்கள்.அவரிடமும் ஆலோசனைகளைப் பெறுங்கள். சம்பாசணைகளில் அவரையும் இணைத்துக் கொள்ளுங்கள். இதனால் வீணான சந்தேகங்களை தவிர்க்கலாம். அத்தோடு உங்களையோ உங்கள் நட்பினையோ தவறாக பேசினாலும் உங்கள் கணவன் /மனைவி உங்களுக்கு சாதகமாக பேசுவார்.

அடுத்து வேலைத் தலங்களில் இணையும் ஆண்-பெண் நட்புகளால் தான் இன்று அதிக குடும்பங்கள் பாதிக்கப்படுவதை அறிகின்றோம்.

இதற்கு காரணம் யார்? என்ன தான் ஆண் தவறு செய்தாலும் பழி வந்து விழுவது பெண் மீது தான். அதனால் தான் வேலை பார்க்கும் பெண்கள் தங்களுடைய ஆண் நண்பர்களுடன் எப்படி பழகலாம், பிரச்சினைகள் வராமல் எப்படி தங்களை காத்துக் கொள்ளலாம் என்பது பற்றி சில குறிப்புக்களை தருகிறோம். முடிந்த வரை உங்களை நீங்கள் காத்துக் கொள்வது சிறந்தது.

1.நம் உடைகள் எதிரிலிருப்பவரின் உணர்வுகளைத் தூண்டாமல் இருப்பது நல்லது. அதனால் தான் ஆள் பாதி ஆடைபாதி என்றார்கள். நாகரீகமாக உடுத்தினாலும் கூட நேர்த்தியாக உடுத்த வேண்டும்.

2.முக்கியமாக உடன் வேலைபார்க்கும் ஆண்களிடம் தம்முடைய தனிப்பட்ட விடயங்களை பங்கு போடாதீர்கள். அங்கே தான் ஆரம்பிக்கிறது பல பிரச்சினைகள்.

3.சொந்த குடும்ப விஷயங்களுக்கு உடன் வேலை பார்க்கும் ஆண்களிடம் யோசனை கேட்காதீர்கள்.

4.உடன் வேலை செய்தாலும் கையடக்க தொலைபேசி இலக்கங்களையோ, வீட்டு தொலைபேசி இலக்கங்களையோ கொடுக்காதீர்கள். நம்பிக்கைக்குரியவர்களைத் தவிர.

5.சில நேரங்களில் உயர் அதிகாரிகளே தொல்லைகள் தருவார்கள். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செய்யாமல் பிரச்சினைகள் தீரும் வகையில் மிக ஜாக்கிரதையாக கையாளுங்கள்.

6.உயர் அதிகாரிகளுக்கு ஒத்துழைக்கவில்லை என்றால் அவர்களின் பழிவாங்கும்படலம் உங்கள் வேலைகளில் குறை கண்டு பிடிப்பதில் ஆரம்பிக்கும். அதனால் முடிந்தவரை வேலைகளில் தவறு செய்யாதீர்கள்.

7.ஆண் நண்பர்களிடம் கை குலுக்குவது தவறில்லை. அதற்காக எல்லாவற்றுக்கும் கைகொடுப்பது, தொட்டுப்பேசுவது கூடாது.

8.உங்களின் பொருளாதார இயலாமை நிலையை உடன் பணிபுரியும் ஆண்களிடம் கூறாதீர்கள்.

9.உடன் பணி புரியும் ஆண் விமர்சிக்கும் அளவிற்கு உடையணியாதீர்கள்.

10.அலுவலகம் என்பது பணிபுரிய மட்டுமே. உங்களது தனிப்பட்ட விருப்பங்ளுக்கும் குடும்ப பிரச்சினைகளுக்கும் ஏற்ற இடம் அது அல்ல என்பதை நீங்கள் முதலில் உணர வேண்டும்.

11.நட்பு ரீதியாக புன்னகைக்கலாம். ஆனால் காரணமில்லாமல் எல்லாவற்றுக்கும் ஆண்களிடம் சிரிக்காதீர்கள்.

12.ஒரு ஆணிடம் கை குலுக்குதல், தேநீர் பருகுதல், இரவு நேரத்தில் வாகனத்தில் செல்லுதல் இவையெல்லாம் நம் அக்கம்பக்கத்தினரால் கூர்மையாக கண்காணிக்கப்படும் விஷயங்கள் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள தனிப்பட்ட இயல்பைப் பொறுத்து ஆணிடம் பெண்கள் பழகலாம். ஆனால் பொதுவான ஆண்கள் சமூகம் என்பது பெண்ணை வித்தியாசமான அங்க அவயங்கள் கொண்ட சதைப் பிண்டம் என்றே நினைக்கிறது. ஒரு ஆண் தன்னுடன் வேலை செய்யும் பெண்களை தங்களுடன் வேலை செய்யும் மற்ற ஆண் பணியாளர்களைப் போல எப்போது நினைக்கிறானோ அப்போது தான் அவனோடு பணிபுரியும் பெண்கள் பாதுகாப்பாக இருப்பார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



13.பெண்களின் பார்வை, உடை, பேச்சு இவற்றின் காரணமாகத்தான் ஆண்கள் தவறு செய்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. உடன் வேலை செய்யும் ஆண், பெண்ணிடம் குற்றம் செய்யாமல் இருப்பது அவர்களது கடமையும் கூட.

14.பெண்களிடம் தவறாக பேசுவது, அசிங்கமான செய்கைகள் காண்பிப்பது, விரும்பத்தகாத புத்தகங்களை காட்டுவது போன்ற தவறுகள் பெண்களுக்கு எதிராக நடக்கின்றன.

15.உடன் வேலை பார்க்கும் ஆண் தவறாக முயற்சிக்கும் போது பெண்கள் கண்டிப்பாக எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும். இல்லையெனில் அதுவே ஆண்களுக்கு மிகப் பெரிய பலம் ஆகிவிடும். நாம் எது செய்தாலும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் அமைதியாகத் தானே இருக்கா.. மற்ற விஷயங்களிலும் நமக்கு ஒத்துழைப்பா என்று சம்பந்தப்பட்ட ஆண் நினைத்து விடுவான். இதனால் பிரச்சினை பூதாகரமாகும் போது....

பெண்கள் வேலைக்குப் போகும் உரிமையை வீட்டில் இழக்கிறார்கள்.உடன் வேலை பார்க்கும் ஒரு ஆண் பெண்ணின் முகத்தைப் பார்த்து பேசாது அவளின் அங்க அவயங்களைப் பார்த்துப் பேசினால் அந்த ஆண் பெண்ணிற்கு தவறுதான் இழைக்கிறான். அது உயர் அதிகாரியாக இருந்தாலும் கண்டிக்க குறித்து காவல் நிலையத்திலும் புகார் கொடுக்கலாம். எல்லா அரசாங்க அலுவலகங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் அது மட்டுமல்ல கல்வி நிறுவனங்களிலும் புகார் கமிட்டி என்ற ஒன்று இருக்க வேண்டும். இந்த புகார் கமிட்டியில் அந்த நிறுவன பெண் ஊழியர்கள் உறுப்பினர்களாக வேண்டும். அந்த கமிட்டியில் நிறுவனத்திற்கு அப்பாற்பட்ட ஒருவர் பெண் வழக்கறிஞரோ அல்லது என். ஜி.ஓ. என்று யாராவது ஒருவர் தலைமை ஏற்க வேண்டும். நாம் கொடுக்கும் புகாரின் பேரில் நிறுவன அதிகாரி நடவடிக்கை எடுக்காவிட்டாலும் கமிட்டியில் இருக்கும் மூன்றாவது பொதுவான நபர் கட்டாயமாக நடவடிக்கை எடுப்பார். அப்படி புகார் கமிட்டி இல்லாத நிறுவனம் தவறு செய்யும் நிறுவனம் என்று அர்த்தம்.ஆண்கள் உடன் வேலை செய்யும் பெண்களுக்கு தவறு இழைத்தால் மனித உரிமை ஆணையத்தில் புகார் தரலாம். இது குறித்து நீதி மன்றத்திலும் புகார் தரலாம்.


16. பெண்களுக்கு சாதகமாக இப்போது நிறைய சட்டங்கள் உள்ளன. பெண்கள் அவற்றைத் தெரிந்து கொள்வது அவர்களுக்கு அதிக பாதுகாப்பு ஏற்படுத்தித் தரும். ஒரு ஆணிடம் பெண் சிறிது நெருக்கமாகப் பழகினாலே அவர்கள் உடல் ரீதியாகவும் ஒத்துழைப்பார்கள் என்று அந்த ஆண் நினைத்துக் கொள்கிறான். அங்கே தான் ஆரம்பிக்கிறது பிரச்சினை. இது பெண்களைக் குறித்த தவறான கருத்து. பெண்களின் உணர்வுகளுக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான ஆண்கள் தவறுவதில்லை.
பெண்களின் விஷயத்தில் ஆண்களின் ஒழுக்க நீதிகள் மாற வேண்டும். நிறைய விதமான தொல்லைகள் தினமும் பெண்களுக்கு இழைக்கப்படுகிறது. பாலியல் சீண்டல்கள், அட்டெம்ப்ட்ரேப், கொலை, மனரீதியான தாக்கங்கள் அவதூறான சொல் போன்றவை.
17.தன்னிடம் அன்பாக பேசக் கூடியவர்கள் எல்லோருமே தன்னுடைய வாழ்க்கையை காப்பாற்றப் போகிறவர்கள் என்ற எண்ணம் பெண்களுக்கு கூடாது. வேலை செய்யும் இடத்தில் ஆண் பெண் உடல் ரீதியான ஈர்ப்புகளுக்கு ஆளானால் அதனால் ஏற்படும் பின் விளைவுகள் நிஜமாகவே விபரீதமாக இருக்கும்.
18.அலுவலகத்தில் குறிப்பாக எந்தவொரு ஆணுடனும் தாழ்வான இரகசியக் குரலில் பேசாதீர்கள். இது கேட்பவர்களுக்கும், பார்ப்பவர்களுக்கும் தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும்.
19.ஜல், ஜல் என்று அதிக ஒலி கொண்ட கொலுசைத் தவிருங்கள், அலுவலகத்திற்கு அதிக சத்தம் போடும் கண்ணாடி வளையல்களும் வேண்டாமே...
20.உங்கள் ஆடை பற்றியோ அல்லது உங்களுக்கு உள்ள திறமை பற்றியோ பாராட்டும் போது 'நன்றி' என்று இனிமையாக சொல்லுங்கள். தேவையில்லாமல் வெட்கப்படுவதைத் தவிருங்கள்.




21.யாரிடம் பேசினாலும் கண்ணைப் பார்த்துப் பேசுங்கள். அவர்களையும் அப்படியே பேச அனுமதியுங்கள்.
22.அரட்டையில் ஜோக்ஸ் என்ற பெயரில் விரச பேச்சுக்களை அனுமதிக்காதீர்கள்.
23.எந்தவொரு ஆணாவது உங்களிடம் தவறான முறையில் பழகுவதாக தெரிந்தால் முதலில் நீங்களே இரண்டொரு முறை எடுத்துச் சொல்லி கண்டித்துப் பாருங்கள். அப்படியும் தொடர்ந்தால் உங்கள் மேலதிகாரியிடம் புகார் செய்யுங்கள்.
24.எதற்காகவும் எந்தப் பிரச்சினைகளுக்காகவும் அழாதீர்கள். அழும் பெண்களை சுலபமாக ஆண்கள் திசை திருப்பிவிடுவார்கள்.
25.தேவையே இல்லாமல் எதற்கெடுத்தாலும் சத்தமாக சிரிக்காதீர்கள்.
26.ஆண்கள் தனது மனைவியை உங்களோடு ஒப்பிட்டு பேசுவதையோ அல்லது அவளுக்கு ஒன்றுமே தெரியாது என்று மதிப்பை குறைத்துப் பேசுவதையோ அனுமதிக்காதீர்கள்.
27.ஆண் எந்த நோக்கத்திற்காக உங்களிடம் பேசுகிறான் என்று அவன் நோக்கத்தை அவன் வார்த்தைகளிலும் கண்களிலும் இருந்து பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதைப் பொறுத்தே ஒரு பெண் ஆணிடம் பழகும் போது அந்த உறவை எவ்வளவு தூரத்தில் வைக்கலாம் என்று வரைமுறைப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆணிடமோ, பெண்ணிடமோ நட்பு ஏற்படுவது இயல்பானது. ஆனால் அது அவளது சுய கௌரவத்தை எந்த வகையிலும் பாதிக்காத வகையில் இருக்க வேண்டும் அதுவே நிலையானது.

பட்டாசு கொழுத்தினேன்

வெடித்துச் சிதறியது

செய்த குழந்தைகளின் கைகள்.



தீபாவளி

மட்டுவில் ஞானக்குமாரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**ஆங்கிலேயர்கள்தான் எங்களுக்கு பாராளுமன்ற ஆட்சியை அறிமுகம் செய்தவர்கள். அதற்காக அவர்கள்தான் ஏதோ ஜனநாயக ஆட்சியை எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தவர்கள் என்று நாங்கள் நினைத்துவிடக்கூடாது. ஆங்கிலேயர் வருவதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே பிரதேச அரசாங்கங்கள் எங்கள் கீழைத்தேய நாடுகளுக்கு அறிமுகமாகி விட்டன. எல்லாம் மன்னராட்சி இருக்கத்தக்கதாகத்தான்.**

சரிதானே. நல்ல பாதைகள், தபால், டெலிபோன் வசதிகள், ரயில் போன்ற போக்குவரத்து வசதிகள் இவையொன்றும் இல்லாவிட்டால் ஒரு ராசாவால் என்னதான் செய்ய முடியும்? தன்னுடைய இராச்சியத்தின் ஒரு மூலையில் இருந்து பிரச்சினை என்று ஒரு செய்தி அவருக்கு வந்து சேர முதல் அந்தப் பிரச்சினை முற்றிப் பழுத்திருக்கும்.

இதனால் வரி வசூலிப்பவர்களை ஒவ்வொரு பிரதேசமாக நியமித்து தனக்கு வேண்டிய வருமானத்தை அவர் தேடிக்கொண்டார். பல சந்தர்ப்பங்களில் அப்படி வரி சேகரித்துக் கொடுப்பவர்கள்தான் அந்தப் பிரதேசத்தின் தலைவர்களாக நியமிக்கப்பட்டார்கள். இதைத் தவிர வேறொரு நிர்வாகமும் இராசாவுக்குப் பண்ண முடியவில்லை. இராசாவுக்குப் பண்ண முடியாத இந்த நிர்வாகத்தைத்தான் அன்றைய பிரதேச அரசாங்கங்கள் செய்தன. அந்தக்கால பிரதேச அரசாங்கங்கள் எவை? இவை என்ன செய்தன என்ற கேள்விகளுக்குப் பதிலைச் சொல்ல வேண்டுமானால் உங்களைத் தமிழ் சினிமாக்களுக்குத்தான் கூட்டிக்கொண்டு போக வேண்டும். அதில் சரத்குமார், விஜயகாந்த் போல ஹீரோக்கள் அடிக்கடி போடும் வேடம் பஞ்சாயத்துத் தலைவர் பாத்திரம். அவர்கள் தலைமை தாங்கி நீதி சொல்லும் அந்தப் பஞ்சாயத்துக்கள்தான் முந்திய காலத்துப் பிரதேச அரசாங்கங்களாக இருந்தன. பஞ்சாயத்துக்கள் ஒரு மனிதனின் பிறப்பிலிருந்து இறப்பு வரையிலான சகல தேவைகளையும் கவனித்துக் கொண்டன. அனேகமாக ஒவ்வொரு பஞ்சாயத்தின் நில அளவும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களின் பட்டிகளை (ஆடு மாடுகள் மேயும் நிலப்பரப்பு) அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்பட்டது. இப்பஞ்சாயத்துக்கள் பிறப்பு, இறப்புக்களைப் பதிவுசெய்து பள்ளிக்கூடங்களை நடத்தின; கோயில் விழாக்களைப் பொறுப்பெடுத்து நடத்தின; வயல் வேலைகளை சகல விவசாயிகளும் ஒன்றாக செய்யும் வகையில் ஒழுங்கமைத்தன; வாய்க்கால் தண்ணீரை



# பஞ்சாயத்துக்களும் கிராமசபைகளும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கான முறையில் வெட்டி விவசாயம் செய்பவர்களெல்லாம் சமமாகப் பகிர்ந்து கொள்ளத்தக்கதாக ஏற்பாடு செய்தன; ஊருக்குள்ளும் ஊருக்கு வெளியேயும் ஏற்படும் சண்டை சச்சரவு பிணக்குகளைத் தீர்த்து வைத்தன; தண்ணீரைப் பகிர்ந்து கொள்ளுவதிலும் மேய்ச்சல் நிலத்தைப் பகிர்ந்து கொள்வதிலும் அயல் ஊர்க்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமான உறவு வளர உதவின; பாரம்பரியங்கள், சடங்கு முறைகள், வேறு சம்பிரதாயங்கள் இவற்றையெல்லாம் தீர்மானிப்பதற்கும் மாற்றியமைப்பதற்குமான தளங்களாக இருந்தன; வெவ்வேறு சாதிகளுக்கிடையிலான உறவுகளை நிர்ணயித்தன; கோயில் மற்றும் திருவிழா, மைதானம், சந்தை, இடுகாடு போன்ற பொதுவிடங்களை நிர்வகித்தன. இதெல்லாவற்றையும் ஊர் மக்கள் கொடுத்த வரிப்பணத்திலேயே செய்து முடித்தன.

இலங்கையிலும்கூட இந்தியாவிலிருந்த பஞ்சாயத்துக்கள் போலவே கிராம சபைகள் இயங்கிக் கொண்டிருந்தன. பஞ்சாயத்து என்றாலும்சரி கிராம சபைகள் என்றாலும் சரி இவைகளெல்லாம் வெகு சுயாதீனமாக இயங்கும் அமைப்புக்கள். காலத்துக்குக் காலம் தேவையின் அடிப்படையில் புதிய சட்டங்களையும் இயக்கின. இதுதான் நீங்கள் பார்த்திருப்பீர்கள் தமிழ்ப் படங்களிலும் எங்கள் கிராமத்தில் இதுதான் வழக்கம் என்று ஏதோவொன்றைச் சொல்லுவார்கள் ஆனால் அந்தச் சட்டம் வேறு கிராமங்களில் இருந்திருக்காது. படையப்பா படம் ஞாபகம் இருக்கின்றதா? அதில் அப்பா ரஜனிகாந்த் போடுவாரே காதலர்களுக்கு ஒரு விதி? அதுபோலத்தான்.

பஞ்சாயத்துக்கள் அக்கிராம மக்களால்தான் தேர்ந்தெடுக்கப்பட்டன. வருடாவருடம் இவை மாற்றப்படாவிட்டாலும் குறைந்தது சரியாக இயங்காத உறுப்பினரை அவ்வப்போது கூட்டம் போட்டு

**எங்கள் இலங்கையிலும்கூட இந்தியாவிலிருந்த பஞ்சாயத்துக்கள் போலவே கிராம சபைகள் இயங்கிக் கொண்டிருந்தன.**



அகற்றுகிற அதிகாரம் மக்கள் கையில் இருந்தது. உறுப்பினர்களுக்கு தங்கள் கடமைகளுக்கான ஒரு சன்மானமும் கிடைக்கவில்லை. ஊர் மக்களிடமிருந்து சம்பாதித்த மரியாதைதான் அவர்கள் சம்பளமாயிற்று. இப்படியெல்லாம் தங்கள் போக்கில் கிராமசபைகள் இயங்கிக் கொண்டிருக்க பிறகு ஏன் அவைக்கு ராசா தேவைப்பட்டது? ஏன் மேலதிகமாக ஒரு முடிக்குரிய ராசாவுக்கு வரியைக் கட்டினார்கள்? அதற்கான காரணம் மிகவும் சுவாரசியமானது. மக்களின் தேவைகள் அவர்களின் ஊருக்குள்ளேயே பூர்த்தி செய்யப்பட முடியுமென்றால் பஞ்சாயத்து அதை முன்னின்று செய்யலாம். ஆனால் அவர்களின் தேவைகள் ஊருக்கு வெளியேதான் பூர்த்தி செய்யப்படவேண்டுமென்றால்? உதாரணமாக பெரியதொரு குளம் கட்டுவித்தால்தான் ஒரு வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் எல்லோரும் தண்ணீர் பெறலாமென்றால் யார் அந்தக் குளத்தைக் கட்டுவிக்கக்கூடியவர்கள்? உள்ளூர் வரிகளைக் கொண்டு அதைச் செய்ய முடியாதல்லவா? இதற்குப் பெரும் நிதிகள் வேண்டும். அந்த மாதிரியான நிதிகள் பல இடங்களிலிருந்து கப்பம் மற்றும் வரி பெறும் இராசாவுக்குத்தான் இருந்தன. அவர்கள்தான் பெரிய குளங்களைக் கட்டுவித்தவர்கள்.

அந்தக் காலத்தில் ராசாக்களுக்கு வேறு வேறு ஊர்களுக்குச் சென்று ஆடு மாடுகளைக் கொள்ளையடிப்பதுதான் வேலை. அப்படிப் பெரும் படைகளுடன் வருபவர்களை சண்டை போட்டு விரட்ட கிராமப் பஞ்சாயத்துக்கு முடியுமா? எனவே ஒரு சண்டியனைத் தடுக்க இன்னொரு சண்டியன் தேவைப்படலாயிற்று. அடுத்தது தூரப் பிரதேசங்களுக்கான வியாபாரம். இதைப் பாதுகாப்பாக மேற்கொள்வதற்கு ஒரே கொடியின் கீழுள்ள நிலப்பிரதேசம் வசதியாக இருந்தது. அங்கெல்லாம் தங்கு தடையின்றி அந்த

**அந்தக் காலத்தில் ராசாக்களுக்கு வேறு ஊர்களுக்குச் சென்று ஆடு மாடுகளைக் கொள்ளையடிப்பதுதான் வேலை. படைகளுடன் வருபவர்களை சண்டை போட்டு விரட்ட கிராமப் பஞ்சாயத்துக்கு முடியுமா?**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வரி இந்த வரி என்று கொள்ளை வரி கட்டுகின்ற பிரச்சினையுமின்றி வியாபாரம் செய்ய முடிந்தது. இப்படி இன்னோரன்ன காரணங்களுக்காகத்தான் ஒரு கொடிக்குக் கீழ் ஒரு குடைக்குக் கீழ்ப் பல கிராமங்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசா ஆளும் இராச்சியமாயின. ஆனால் ராசா ஆண்டால் என்ன கிராமப் பஞ்சாயத்துக்கள் தங்களது சுயாதீனத்தை இழக்கவில்லை. பிரச்சினைக்குரியவர்கள்தான் பிரச்சினையைத் தீர்க்கக்கூடியவர்கள் என்கின்ற சரியான கோட்பாட்டில் அவை இயங்கிக் கொண்டு வந்தன. பல பொதுக்காணிகளில்கூட கண்டபடி ராசாவால் கை வைக்க முடியவில்லை என்றால் நம்புவீர்களா? இவையெல்லாம் அந்தந்த கிராமப் பஞ்சாயத்துக்களின் அதிகாரத்திற்குக் கீழேயே நிர்வகிக்கப்பட்டுக்கொண்டு வந்தன. அவையே விரும்பி அரசனுக்கு நிலங்களைக் கொடுத்தால்தான் உண்டு. அப்பப்போ கொடுங்கோலன் ஒருவன் ஆட்சிக்கு வந்தால் கஷ்டந்தான். ஆனால் பொதுவில் பெரிய பிரச்சினைகள் எதுவும் இல்லாமல் நூற்றுக் கணக்கான வருடங்கள் வாழ்ந்து விட்டனர் எங்கள் மூதாதையர்.

வெள்ளையர்களின் காலனித்துவ ஆட்சி வந்தபோதுதான் முதல் தடவையாக கிராமச் சபைகளின் அதிகாரங்களில் பெரிய மட்டங்கள் கை வைக்க ஆரம்பித்தன. வெள்ளையர்களுக்கு முக்கியமாகத் தேவையான இரண்டு விடயங்கள் கிராமிய அதிகாரத்தில் இருந்தன. ஒன்று காணி நிலம். அடுத்தது உழைப்பாளிகள். தங்கள் வருமானத்திற்காக முதலிட காணி வேண்டும், அந்த வளத்தை விருத்தி செய்ய உழைப்பு வேண்டும். நிலத்திலிருந்து மக்களைக் கிளப்பினால்தான் அவர்கள் கூலித் தொழிலுக்குப் போவார்கள். இதைக் கூடிய அளவில் இந்தியாவில்தான் செய்தார்கள். நல்ல உழைப்பாளிகளான மக்களை அவர்கள் நிலத்தைப் பறிமுதல் செய்து ஓட்டாண்டி ஆக்கினார்கள். பிறகு இலங்கை, பிஜி, ஆபிரிக்கா என்று கூலித் தொழிலாளர்களாக ஏற்றுமதி செய்தார்கள். நிலத்திலிருந்து மக்களைப் பிரிப்பதற்கு கிராம சபைகளைச் செயலிழக்க வைக்க வேண்டியிருந்தது. மற்றவர்களை விட ஆங்கிலேயர்தான் கூடிய அளவில் உண்மையில் திட்டமிட்டு இந்தக் காரியத்தைச் செய்தார்கள். ஒவ்வொரு மக்களுக்குமுரிய உள்ளூர்ச் சட்டங்கள் இருந்தும் தங்கள் நாட்டுச் சட்டத்தை இங்கு அறிமுகம் செய்தனர். காணிகளையெல்லாம் தங்கள் நாட்டரசரின் முடிக்குரிய காணிகளாகப் பிரகடனம் செய்தனர். வெகு சீக்கிரம் கிராம சபைகளின் ஆட்சி முடிவுக்கு வந்தது. ஆட்சி அதிகாரமும் நிர்வாகமும் எல்லாமுமே மத்தியில் குவிக்கப்பட்டது. மத்தியில் இருப்பவர்களின் தேவைகளுக்கும் நலன்களுக்கும் ஏற்றவாறு பிரதேசங்களில் சட்ட திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இதன் விளைவுகளைத்தான் நாங்கள் யுத்தம் என்னும் போர்வையில் இன்னமும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.


**பல காணிகளில் கூட கண்டபடி ராசாவால் கை வைக்க முடியவில்லை என்றால் நம்புவீர்களா? இவையெல்லாம் அந்தந்த கிராமப் பஞ்சாயத்துக்களின் அதிகாரத்திற்குக் கீழேயே நிர்வகிக்கப்பட்டுக்கொண்டு வந்தன**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசியல்
ரஜனி படம்
சிம்ரன் சேலை
எல்லாவற்றையும்
பற்றிப்பேசினார்கள்
மருந்துக்கும் வரவில்லை
தாயின் நினைவு நாளிலே
அவளைப்பற்றி ஒரு சொல்

மட்டுவில் ஞானக்குமாரன்

# நன்றி உணர்வு



"ஊடக சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டும்
ஊடகவியலாளர்கள் தந்திப் போராட்டம்"




தபால் வருமானம் வரவரக் கூடுது.


இருக்கிறம் காத்திருப்பு 2 இருக்கை 5


ஒரு பொல்லாப்பும் இல்லை — மாதம் இருமுறை

ஈகோ பப்ளிசிங் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட்டால் வெளியிடப்படுகிறது.

ஆசிரியர்
இளையதம்பி தயானந்தா
நிர்வாக ஆசிரியர்
சாந்தி சச்சிதானந்தம்
உதவி ஆசிரியர்
ம. ஸ்கந்தரூபன்
ஆசிரியர் குழு
எஸ். ரஞ்சகுமார்
அப்துர் ரஹ்மான்

கௌரவ ஓவியர் ஆசை இராசையா
ஓவியர் சஞ்ஜீத்
வடிவமைப்பு க. மயூரன், முஜீன், க. பிரணவன்
கணினித் தட்டச்சு பா. கரன், சதிஸ்
தொடர்பு
3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
தொலைபேசி: +94 60 215 0836 +94 11 250 6272
தொலைநகல் +94 11 258 5190
மின்னஞ்சல் irukkiram@gmail.com
கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே.
இதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சோக்கெல்லோ சண்முகம்

**ஒரு** திங்கட் கிழமை அப்புவையும், அவரோடு சேர்த்து இன்னும் பன்னிரண்டு பேரையும் கோட்டுக்கு கொண்டு வந்தவை. உதில இரண்டு மனிசியும் ஒரு பெட்டையும். ஒரு மனிசியின்ரை கையில குழந்தையும் அழுதுகொண்டிருந்தது.

கோட் சயிலன்ஸ்!

கப் சிப்! எல்லாரும் எழும்பி நிண்டினம்! பொடி இன்னும் அழுதுகொண்டே இருந்தது. வேலுப்பிள்ளை! வேலுப்பிள்ளை! வேலுப்பிள்ளை அப்பு ஓடி வந்து பெட்டிக்குள்ளே ஏறி நிண்டுது.

பாக்கப் பரிதாபமாக இருந்தது.

அப்பு நீதவானைப் பார்த்து கும்பிட்டுக்கொண்டு அழுதபடி நிண்டுது.

குழந்தையோடு பிடிபட்ட மனுசி அடுத்து வந்து நிண்டா. பிள்ளை இன்னும் அழுது கொண்டே இருந்தது.

பொலீஸ்காரன் வந்து பிள்ளையின்ரை தாயிட்ட ஏதோ சொன்னான்.

பிள்ளை அழுகையை நிப்பாட்ட இல்லை. பொலீஸ்காரன் எண்டால் பிள்ளைக்கு என்ன பயமே!

அப்புவின்ரை பிறக்கிறாசி நீதவானுக்கு முன்னாலை வந்து ஒருக்கா குனிஞ்சு நிமிர்ந்தார்.

அப்புவையும் மற்றவையையும் பிடிச்ச பொலீஸ்காரன் நீதவானுக்கு முன்னால காலைத் தூக்கி வச்சு ஒரு சல்யூட் போட்டு நிண்டார்.

நீதவான் பொலீஸ்காரனை கோவமாகப் பார்த்த மாதிரி இருந்தது. பொலீஸ்காரன் களைக்க களைக்க ஓடிவந்து சல்யூட் போட்டது நீதவானுக்கு பிடிக்கேலைப் போலிருக்கு.

எங்கன்ரை பிறக்கிறாசி நீதவானிட்டை தன்ரை கோட்டையும் ஆட்டிக்கொண்டு இங்கிலீசிலை கோவமாக கையைக்காட்டிப் பேசினார். நீதவான் பொலீஸ்காரனிடம் சிங்களத்திலை கோவமாகக் கேள்வி கேட்டார்.

பிறகு இங்கிலீசிலை பேசினார்.

என்ன சொன்னவர் எண்டு எனக்குத் தெரியாது. “டிஸ்மிஸ்” ஒரு சொல்லுக்கேட்டது.

அப்பு நீதவானைப் பார்த்து கும்பிட்டுட்டு சிரிச்சுக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னட்டை ஓடி வந்தது. அப்புவுக்குப் பின்னால மற்றவையும் வந்தினம்!



அப்புவை ஒரு பொலீஸ்காரன் ஓடி வந்து பிடிச்சு இழுத்துக்கொண்டு போய், அங்கையிருந்த ஒரு கூட்டுக்குள்ளை, மற்றவையோடு சேர்த்து பூட்டினான்.

கந்தசாமி என்னட்டை வந்து சொன்னான். கையெழுத்து வாங்கிக்கொண்டு வருவினம், பாஸ்போட் எல்லாம் குடுக்கச் சொல்லி நீதவான் சொல்லியிட்டார். வேலுப்பிள்ளை அம்மான் அடுத்த கிழமை கனடாவிலை. கொஞ்சம் கூடப் பயமில்லாமல் எல்லாருக்கும் முன்னாலை கதைச்சான். அப்புவிட்டையும் போய்க் கதைச்சான். சுண்டெலியாக இருந்த கந்தசாமி சண்டைக்கு கோட்டடியில சிங்கமாக் காட்சியளித்தான்.

இப்ப நாங்கள் வெள்ளவத்தையில அந்த யாழ்ப்பாண லொட்சிலதான் நிக்கிறம். கந்தசாமியும் நிக்கிறான். அப்புவோட கதைச்சிக் கொண்டு நிக்கிறான். அப்புவுக்கு அவன் மேல இருந்த கோபம் இப்ப இல்லைப் போலத் தெரியுது. விசாப் பிள்ளையாரில இருந்த கோபத்தையும் அப்புவிட்ட கந்தசுவாமி மாத்திட்டான் போல இருக்கு. ஏனென்டால் அடுத்த கிழமை விசாப் பிள்ளையாருக்கு ஒரு பொங்கல் வைக்க வேணுமென்டு அப்பு சொல்லிக்கொண்டிரிக்கு. கனடா ஆசை அப்புவுக்கு குறைஞ்ச மாதிரி தெரியேல. இப்ப என்னும் கூடின மாதிரி தெரியுது. அக்கரைக்கு இக்கரை பச்சையணை! பழமொழி சரியேணை? என்னத்தைச் சொன்னாலும் எங்களின்ர ஊரைப் போல வருமேயணை? அங்க எங்கன்ரை வளவுகள், தோட்டஞ்சரவெல்லாம் பாழாப் போகுது! நான் இங்கை அப்புவோட ஆறு மாசாமாச்சணை. மனிசி பூமணி ஆடு மாடுகள், வயல் வாய்க்களோட தனிய மாரடிக்கிறா. ரெலிபோன் எடுக்கிற நேரமெல்லாம் உடன வரட்டாம். அப்ப தன்ன தனிய விட்டிட்டுப் போகாத என்கிறாள். நான் இங்கை பாடாய்ப்படுறன். சிலநேரம் ஊரோடு கதைக்கேலாமல் ரெலிபோனை நிப்பாட்டி விடுவாங்கள். அப்பதான் கொஞ்சம் ஆறுதல்.

இங்கை கொழும்பில எண்னணை வாழுது? விடியப்பிறம் இரண்டு மணி மூன்று மணிக்கெல்லாம், முந்தி அப்பு இறைப்புக்கு எழும்பின மாதிரி வந்து எழுப்பினான்கள். ஏன் வந்தனீ? எங்கிட்டுப் போறாய்? எவ்வளவு நாளைக்கு நிப்பாய்? எண்டெல்லாம் கேக்கிறாங்கள். அது



கந்தசாமியையல்லோ கேக்கவேணும்? அப்பு கனடாவிற்கு போயிட்டால் எனக்கு பிறகு இங்கு என்ன வேலை. பஸ்சில எந்த நேரம் எங்க குண்டு வெடிக்குது எண்டு தெரியாது. வெளிக்கிட்டுப் போகேக்கையே மரண சாசனம் எழுதி வச்சிட்டுப் போகவேணும்.


அரசாங்க விருந்துக்கு எண்டைக்கு வந்துகூட்டிக் கொண்டு போகினமோ தெரியாது! அப்படியிருக்க எங்களுக்கு இங்க இருக்க என்ன விருப்பமே? அப்புவும் கனடா ஆசையை விட்டால் வீட்டை கூட்டிக் கொண்டு போயிடலாம். இனிப் பங்குனிச் சித்திரையோடு கோயில் கொடிகளும் ஏறுது! பனையும் கொடியேறுது! எண்டு அப்புவுட்ட சொல்லிப் பார்த்தன். பனங்கள்ளு இந்தியாவிலிருந்து கனடாவுக்கு போத்தல்களில் அடைச்சு வருகுதாம். உடன் கள்ளைப் போல இருக்குமாம், எண்டு அப்பு சொல்லுறான். கந்தசாமி ஒரு விண்ணன் எண்டது இப்ப எனக்கு நல்லாய் விளங்குது. ஆச்சி! இன்னும் ஒரு மாசம் தான் பார்ப்பன். அப்பு வெளிக்கிட்டால் என்ன வெளிக்கிடாட்டில் என்ன நான் என்ர மண்ணுக்குப் போய் விடுவன். அங்கயிருக்கிற கிணத்துத் தண்ணியே போதுமென. என்ன வளம் இல்லையென்று நீயொரு பாட்டுப் பாடுவாய். பனையும் கிணறும் இருக்கிற வரை கடைசி வரை அங்கை பஞ்சம் வராதணை. வானம் பார்த்த பூமி தான் அங்க. பட்டினியாலை செத்ததெண்டு நீ ஆளைச் சொல்லு. ஓடுறவையெல்லாம் ஓடட்டும் நான் நாட்டை விட்டு ஓட மாட்டன்.

கொழும்பிலை இப்ப சோத்துப் பார்சல் நூற்றயஞ்சு ரூபா! சோத்தையும் குறைச்சு கறிகளையும் குறைச்சுப் போட்டாங்கள். வேலைக்கு கடைகளிலை ஆக்கள் இல்லை. சாப்பாடு கட்டுறதுக்கே கீவுலை நிக்க வேணும். வழி தெருவில போக்குவரத்திலை முழு நேரமும் சரி பிறகு என்ன வேலையைச் செய்யிறது. பஞ்சம் மலைப் பாம்பு போல் மெல்ல மெல்ல சனத்தை விழுங்கும். கந்தசாமி அப்புவுன்ரை பழைய கூட்டாளி ஒராளுடன் வாறான். புதுசா ஏதாவதொரு வானவேடிக்கை காட்டுவான். பிறகு எழுதிறனண்ணை!

பட்சமுள்ள சண்ணுவத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அடுத்தடுத்து தனது ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கிறார் ரஜினிகாந்த். சும்மாவா நம்ம சுப்பர் ஸ்டாரல்லே. மம்மூட்டி நடிப்பில் வெளியாகி சக்கை போடு போட்ட "கதபறயும் போள்" என்ற படத்தின் மீள் தயாரிப்புத் தான் குசேலன்.

பி.வாசு இயக்க ரஜினி நடித்துள்ள இப்படத்தில் பசுபதி முக்கிய வேடம் ஏற்றுள்ளார். இவரை விட நயன்தாரா, மீனா, எம்.எஸ் பாஸ்கர், லிவிங்ஸ்டன், சந்தானபாரதி, பாத்திமா பாபு, தியாகு, கீதா, சோனா, ஆர்.சுந்தரராஜன், மனோபாலா, சின்னி ஜெயந்த் ஆகியோருடன் சிறப்பு வேடங்களில் பிரபு, விஜயகுமார், மதன்பாப், நிழல்கள் ரவி, சினேகா, குஷ்பு, திரிஷா ஆகியோர் நடித்துள்ளனர்.

இந்தப் படத்தில் ரஜினிகாந்தின் கிராமத்து நண்பராக நடித்திருப்பவர் நடிகர் பசுபதி. பெரிய பட்டாளமே இறக்கி விடப்பட்டுள்ளது. நட்பை வலியுறுத்தும் இப்படத்தில் ரஜினி இரண்டு, மூன்று காட்சிகளுக்கு பிறகே தோன்றுவாராம். அதுவும் சாராதரண குடும்பத்தில் பிறந்து வளர்ந்து சுப்பர் ஸ்டார் நடிகர் ஆகிற மாதிரி எடுத்துள்ளனர்.

குசேலனில் சுப்பர் ஸ்டாராக நடிக்கும் ரஜினி ரசிகர்களுடன் சேர்ந்து சாந்தி தியேட்டரில் படம் பார்ப்பது போன்ற காட்சியும் படமாக்கப்பட்டுள்ளது. குசேலன் வெளியான பிறகும் ரசிகர்களுடன் அமர்ந்து படம் பார்க்க ரஜினிகாந்த் விருப்பம் தெரிவித்துள்ளாராம். சினிமா.. சினிமா..சினிமா... எம்.ஜீ. ஆர் - சிவாஜி, என்.டி.ஆர். ராஜ்குமார் வந்ததிந்த சினிமா என்ற பாடல் தான் படத்தில் முக்கியமான விடயம். இந்தப் பாடலில் சுப்பர் ஸ்டார் திரையில் தோன்றினால் தியேட்டரே அதிரும் என்பது போன்ற வரிகளும் இடம் பெற்றுள்ளன. இந்தப் பாடலை எழுதியிருப்பவர் வாலி. ஜி.வி பிரகாஷ் இசையமைத்துள்ளார். இறுதி கட்டப் படப்பிடிப்புகள் வருகின்றன. குசேலன் வந்தால் ரசிகர்களுக்கு குதூகலம் தான் போங்க.

**ரோமியோ**



## காதல் (ஹைகூ)

கைகள் பற்ற
கண்களினால் உரசிய
தீக்குச்சி

ham Foundation.
avanaham.org

# பதஞ்சலியின் அடிச்சுவடுகளில்.......



பாபாஜியினுடைய வயது 1800 வருடங்களுக்கும் மேலாகிறது! வியப்பாகியிருக்கிறதா? சித்தர்களின் வாழ்க்கை வரலாற்றில் இப்படிப்பட்ட அதிசயங்கள் சாத்தியமாகின்றன.

பல ஆன்மீகவாதிகளின் அனுபவங்களின் தொகுப்பாக, அவர்கள் பாபாஜியைக் கண்டு கதைத்த நிகழ்ச்சிகளின் பட்டியலே எங்களுக்குத் தற்போது கைவசம் இருக்கும் பாபாஜியின் வரலாறு.

நாகராஜனாய் பறங்கிப் பேட்டையில் ஒரு நம்பூதிரி பிராமணக் குடும்பத்தில் பிறந்து போகநாதரிடமும் அகஸ்தியரிடமும் உபதேசம் பெற்று ஒரு சித்தனாக பரிணாம வளர்ச்சி எய்தினார் பாபாஜி. கி.பி 203 ஆம் ஆண்டு அவருடைய பிறப்பையடுத்து அவதரித்த பல ஆன்மீகவாதிகளுக்கு கிரியா யோகத்தை அறிவித்து வழிகாட்டியிருக்கிறார்.


**போகநாதரும் அகஸ்தியரும்**

கதிர்காமத்தில் போகநாதரிடம் தீட்சை பெற்ற பாபாஜியின் ஆன்மீகப் பாதையில் அடுத்த கட்டமாக தனது குரு அகஸ்தியரிடம் செல்லுமாறு பணித்தார் போகநாதர். கால்நடையாக பொதிகை மலைச்சாரலில் தவம் செய்யும் அகஸ்தியரை சந்திப்பதற்கு குற்றாலம் சென்றான் நாகராஜன். அங்கு அகஸ்தியர் தவம் செய்யும் வனத்துக்கு வெளியே அமர்ந்து அவரை நினைத்து தவம் செய்யத் தொடங்கினான். உணவு, தண்ணீர், நித்திரை இல்லாமல் அமர்ந்து 48 நாட்கள் கடும் தவம் புரிந்த நாகராஜன் செயலிழந்து சாகும் தறுவாயில் இருக்கும் போது அகஸ்தியர் வனத்திலிருந்து வெளிப்பட்டு அவனை ஆட்கொண்டார்.

அகஸ்தியரின் சக்தி பீடத்தில் இருந்த நாட்களில் கிரியா குண்டலினி பிராணாயாமம் பற்றி அறிந்து கொண்டான் சிறுவன்.

கற்றவற்றை உபதேசிக்கத் தகுந்த இடம் பத்திரிநாத் என்று அகஸ்தியர் கூற அங்கு சென்று 18 மாதங்கள் கடும் தவமிருந்தான் நாகராஜன். பத்திரிநாத் இமயமலையில் 10,743 அடி உயரத்தில் இருக்கிறது. அங்கு ரிஷிநதியும் அலக்நந்தா நதியும் சங்கமாகும் இடத்தில் தவமிருந்த நாகராஜன் சொரூப சமாதி அடைந்தான்.






உடலிலுள்ள ஒவ்வொரு அணுவிலும் பரம்பொருள் உறைந்து அவரது ஏழு சூட்சும உடல்களையும் திவ்வியமாகவும் காலத்தினால் அழியாததாகவும் செய்துவிட்டது.

பாபாஜி அனுக்கிரகம் பெற்றவர்கள் இமாலயத்து யோகி ஸ்வாமி சித்தேஸ்வரானந்தா பாபாஜியைப் பற்றி எழுதிய நூலில் அவர் ஆதி சங்கரருக்கு கி.பி 800 இல் தீட்சை அளித்தது பற்றிக் கூறியிருக்கிறார். சங்கரருக்கு அஷ்டாங்க யோகத்தை அறியக் கொடுத்ததுமல்லாமல் தாரணம், திய சமாதி இவற்றை கேதார்நாத் என்னும் இடத்தில் உபாசிக்கும் படி கூறினார். அவர் கூறிய படி யோக சாதனை செய்யச் சங்கரர் முற்றும் உணர்ந்த நிலையை அங்கு எய்தினார். ஸ்வாமி சித்தேஸ்வரானந்தாவுக்கும் பலமுறை காட்சி அளித்திருக்கிறார் பாபாஜி.

பாபாஜி பதினைந்தாம் நூற்றாண்டில் பக்த யோகியான கபீர் தாஸ் முன் தோன்றி அனுக்கிரகம் செய்திருக்கிறார். பரமஹம்ஷ யோகானந்தர் "ஒரு யோகியின் சுயசரிதம்" என்னும் நூலில் பாபாஜி லாகிரி மகாசாயாவை சந்தித்த விபரம் அதன் பிறகு யுக்தீஸ்வரரையும் யோகானந்தரையும் சந்தித்ததையும், கிரியாயோகத்தையும் உலகளாவிய ரீதியில் பரப்புவதற்கு ஆணையிட்டதையும் குறிப்பிட்டிருக்கிறார். சமீப காலங்களில் நீலகண்டன் என்னும் சென்னை ஊடகவியலாளரின் வீட்டில் தோற்றம் அளித்திருக்கிறார். இதனைவிட யோகி ராமையா, அன்னி பெசன்ட், மார்ஷல் கோவிந்தன் ஆகியோர் முன்னும் பிரசன்னமாயிருக்கிறார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ குடும்பத்தின் குருவான ஸ்வாமி சாந்தானந்தா சரஸ்வதி தான் பாபாஜிடன் கதைத்திருப்பதாகக் கூறியிருக்கிறார். பரமஹம்ஷ நித்தியானந்தர் காசியில் பாபாஜியை சந்தித்த சம்பவத்தை இப்படி வர்ணித்திருக்கிறார்.

“காசியில் என் முன் தோன்றிய உருவம் பாபாஜி என்று உடனே அறிந்து கொண்டேன். நிலத்திலிருந்து ஒரு அடி உயரத்தில் அவர் பாதங்கள் இருந்தன. இவருடைய உடம்பு உண்மையாயிருக்குமோ என்று சந்தேகம் வந்து விட்டது. ஓடிப் போய் அவர் வயிற்றில் ஓங்கி ஒரு குத்து விட்டேன். அங்கு இருந்தது எலும்பும் தோலும் உள்ள உடம்பு தான் தெரிந்தது. என்னுடைய சந்தேகம் உந்தப்பட்ட செயலைப் பார்த்து பாபாஜி சிரித்-தார்”

“பரமஹம்ச நித்தியானந்தர்” என்று மட்டும் சொல்லி மறைந்தார். அப்போது நான் ராஜசேகரனாக இருந்த படியால் இவர் யாரைக் குறிப்பிடுகிறார் என்று தெரியவில்லை. நித்தியானந்தர் என்னும் ஒரு ஸ்வாமியை போய் சந்திக்கும் படி கூறுகிறார் என்று நினைத்துக் கொண்டேன். சிறிது காலம் சென்ற பின் தான் தெரிந்தது எனது வருங்கால பெயரை உச்சரித்திருக்கிறார் என்று.

### பாபாஜி நிஜமா?

இப்படிப் பலரும் பாபாஜியைப் பற்றி தங்கள் அனுபவங்களை குறித்து வைத்திருக்கின்றனர். அவர்-



கள் கண்ட காட்சிகள் பாபாஜி கூறியதாகச் சொன்ன கூற்றுகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாக அல்லாமல், ஒரே விதமான கருத்துகளை சுமந்து வந்திருக்கின்றன. எல்லோருடைய காட்சியிலும் பாபாஜி ஒரு நித்திய குமரனாக , 16 - 25 வயதுக்கு உட்பட்டவராக இளம் பிராயத்து வடிவமாகத் தென்பட்டிருக்கிறார். சிவந்த நிறமும், கட்டுமஸ்தான உடலும், கணையான பிரகாசம் வீசும் முகமும், தாமிர வர்ண நிற நீண்ட மயிரும் அவர்களுடைய குறிப்புகளில் பாபாஜியை தனிப்படுத்திக் காட்டுகின்றன.

### உலக சமாதானமும் அமைதியும்


அவர்கள் கூற்றுப்படி பாபாஜி உலக சமாதானத்துக்காகவும், போரற்ற ஒரு அமைதியான ஆன்மீக சமுதாயத்தை உருவாக்க தன் பணியை ஆற்றி வருகிறார். உலக சமுதாயத்தின் நன்மைக்காகவே அவர் சொரூப வடிவில் பல நூறு வருடங்களாக இருக்கிறார். கலிகாலத்தில் பிரிவினையும் அனர்த்தங்களும், போரும் உலகை சிதறடிக்க விடாமல் காப்பதிலேயே அவர் தன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறார். இந்தப் பணியில் இவருக்கு உறுதுணையாக இருப்பவர் சொரூபமற்ற யேசு கிறிஸ்துநாதர். இந்தக் கூட்டு முயற்சியைப் பற்றி விரிவான ஒரு வாதம் செய்கிறார் மார்ஷல் கோவிந்தன், தன்னுடைய சமீபத்திய வெளியீடான “பாபாஜியும் யேசுவும்” என்னும் புத்தகத்தில்.

### மேற்கில் பாபாஜியின் அருள்

தனிப்பட்ட விதத்தில் ஆன்மீக உலகத்தையடைய முற்படும் எவரையும் வந்து சந்தித்து, கை கொடுத்து அவரைப் ஆன்மீகப் பாதையில் முன்னேறிச் செல்லுவதற்கு ஆவன செய்து கொண்டிருக்கிறார். அத்தோடு கலிகால மக்களுக்கு ஏதுவான யோகத்தை அறிமுகம் செய்து அது உலகின் பல பாகங்களில் பரவும் படி செய்கிறார். சத்திய யுகத்தில் சிவபெருமான் பார்வதிக்கு உபதேசம் செய்த கிரியா யோகம், பகவத் கீதையில் கிருஷ்ணன் சூரியனுக்கு உபதேசித்ததாகக் கூறப்படும் கிரியா யோகம் , காலத்தின் கதியில் நலிந்து மறைந்திருந்தது. அதற்கு புத்துயிர் அளிக்கவென 1861ஆம் ஆண்டு லாகிரி மகாசாயாவின் மூலமாக கிரியா யோகத்தை அவர் சீடரான யுகதீஸ்வரருக்கும் பின் பரமஹம்ஷ யோகானந்தருக்கும் உபதேசித்தார். யோகானந்தர் பாபாஜியின் வேண்டுகோளுக்கிணங்க கிரியா யோகத்தை மேற்கத்தைய நாடுகளில் பரப்பினார்.

### மகா அவதாரம் பாபாஜி

உலக நன்மைக்கு தளராது உழைக்கும் பாபாஜி நூற்றாண்டுகளை தாண்டி 2050 ஆம் ஆண்டு செய்ய வேண்டிய ஒரு முக்கியமான தொண்டை நோக்கி சென்று கொண்டிருக்கிறார். அது என்னவாயிருக்கும் என்ற தெளிவான கருத்து பிரபலமாகவில்லை. ஆனால் அவர் உலக சமுதாய மீது வைத்திருக்கும் அளவில்லாத அன்பினாலும் சமுதாயம் உய்வதற்கு பல நூறு வருடங்கள் அயராது உழைத்ததனாலும் அவர் “மகா அவதாரம்” எனப் பெயர் பெற்றார். ஒரு சிலர் இவர் தான் மைத்ரேய புத்தர் என்றும் கூறுகின்றனர்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பூலான்தேவி 13

'பயப்படாதே பூலான்' என்று தேவீத்ன் மகளுக்கு அடிக்கடி தைரியம் சொல்லிக் கொண்டிருந்தார். ஊரை விட்டு விலகி மணல் நிறைந்த பாதையில் தனது மகளை தோளில் சுமந்தவாறே அந்த முதியவர் நடந்து கொண்டிருந்தார். இளம் காற்றில் அசையும் பொன்னிறமான போர்வையைப் போன்ற கோதுமை வயல்களையும், அமைதியான நீல வானத்தையும் பார்த்துப் பார்த்துப் பூலான் அமைதியடைய ஆரம்பித்தாள்.

# வேப்பமரத்தின் கீழ் ஒரு துர்க்கை

**பயணம்** கொஞ்சம் நீளமானதாக இருந்தது. அவர்களது ஊருக்கு மிகவும் அண்மையில் உள்ள சிக்கந்நர என்ற பட்டினத்தின் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெறும் நோக்கத்துடன் அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். இடையில் ஓரிடத்தில் வெள்ளரிக்காய்களை வாங்கி குழந்தைக்கு ஊட்டுவது போல பிசைந்து பூலானுக்கு தேவிதீன் ஊட்டி விட்டார். உடனே வயிற்றைப் புரட்டத் தொடங்கியது பூலானுக்கு. மூன்று மணி நேரம் மகளை தோளில் சுமந்தவாறே தேவிதீன் சிக்கந்நர போய்ச்சேர்ந்தார்.

சன நெருக்கடிமிக்க நகரமொன்றை முதன் முதலாக பூலான் கண்டாள். விதம் விதமான கடைகளையும் கடைகளில் நிறைந்திருந்த பல வகையான தின்பண்டங்களையும், புடவை வகைகளையும், ஏனைய பொருட்களையும், சத்தமிட்டு விரையும் பஸ் வண்டிகளும், கார்களையும் குழந்தையின் குதூகலத்துடன் அவள் கண்டாள்.

மருத்துவமனையின் முன் நீண்ட வரிசை காணப்பட்டது. தேவிதீன் வரிசையில் காத்து நின்றார். உச்சிப் பொழுதாகியது. பூலான் மயக்கமடைந்து கீழே விழுந்து விட்டாள். அவள் மீண்டும் கண்களைத் திறந்த போது மருத்துவர் தன்னைப் பரிசோதித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தார். வெள்ளை வெளேரென்ற ஆடைகள் அணிந்திருந்த மருத்துவரின் கருணை மயமான விழிகள் அவரது மூக்குக் கண்ணாடிக்குள் இருந்து பூலானை மிகவும் அனுதாபத்துடன் நோக்கின.

மிகவும் பொறுமையாக நீண்ட நேரமாக அவளைப் பரிசோதித்த மருத்துவர் அவளது கையிலும் பின்புறத்திலும் இரண்டு ஊசிகள் போட்டார். தேவிதீனின் கைகளில் சில மாத்திரைகளைக் கொடுத்தார். விரைவில் குணமாகி விடும் என்று தைரியம் கூறி அனுப்பி வைத்தார்.

வைத்தியசாலைக்கு வெளியே உள்ள பெரு மரங்களின் நிழலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையும் மகளுமாக அசதி தீர படுத்துத் தூங்கினர். அவர்கள் விழித்தெழுந்த போது மாலையாகி இருந்தது. தமது ஊரை நோக்கிச் செல்லும் பஸ் ஒன்றில் அவர்கள் ஏறினார்கள். அந்த பஸ் பிரயாணம் பூலானுக்கு முதல் அனுபவம். அடிவானம் வரை விரிந்திருந்த சமவெளிகளையும் அங்கு நிறைந்து வளர்ந்திருந்த கோதுமைப் பயிர் அந்தி நேரச் செக்கர் ஒளியில் தங்கக் கம்பளமாக மின்னுவதையும் அலுப்பு ஏதுமின்றி பூலான் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே பயணம் செய்தாள். யமுனை நதியின் குறுக்கே போடப்பட்டிருந்த பாலம் ஒன்றினைக் கடந்து இன்னொரு சிறிய நகரத்தில் அவர்கள் இறங்கினார்கள். அங்கே ஒரு குவளை நிறைய ஐஸ் சேர்க்கப்பட இனிப்பான பால் பூலானுக்குப் பருகக் கிடைத்து. சொல்ல முடியாத சுகமொன்றை அந்தப் பானம் அவளுக்கு வழங்கியது. அங்கிருந்து அவர்களது ஊரான குர்ஹகா பர்வ்வா - ஐந்து மைல் தொலைவில் இருந்தது. மீண்டும் நடக்க ஆரம்பித்தார்கள்.

இருட்ட ஆரம்பித்தது. ஆற்றங்கரையில் பறவைகள் கீச்சிடுவதையும், மிருகங்கள் கத்துவதையும் பூலான் கேட்டாள். அவர்களது ஊரின் மிகவும் பழக்கமான வாசனையை அவள் நுகர்ந்தாள். ஆற்றங்கரையில் தேவிதீன் போன்ற ஏதிலிகள் பயிர் செய்யும் தரிசு நிலங்கள் எதிர்ப்பட்டன. அங்கே சோட்டி இருக்கக் கூடுமென எண்ணி பூலான் அந்த நிலங்களிடையே நடந்து சென்றாள். புல் தரையில் ஒரு பாவாடை காய்ந்து கொண்டிருந்தது. அதனருகே யாரோ படுத்திருந்தார்கள். அது சோட்டி தான். பூலானைக் கண்டதும் சோட்டி எல்லையில்லா ஆனந்தத்துடன் அவளைக் கட்டிப்பிடித்தாள். 'பூலான் உன்னைக் காணாமல் நான் மிகவும் கவலையுடன் இருந்தேன்' என்று கூறி ஆனந்தக் கண்ணீர் வடித்தாள் அவள் ஓடோடிச் சென்று அவர்களது நிலத்தில் வளர்ந்திருந்த தர்பூசணிப் பழத்தைக் கொண்டு வந்து துண்டுகளாக்கி பூலானுக்கு கொடுத்தாள்.




அவர்களது வியர்வையை உறிஞ்சி வளர்ந்த அந்த இனிமையான சாறு பூலானுக்கு புத்துணர்வை அளித்தது.

புடவைத் தலைப்பினால் கண்ணீரைத் துடைத்தவாறே பூலானது அம்மா அவளை எதிர்பார்த்து வீட்டு வாசலிலேயே காத்திருந்தாள். பூலானைக் கண்டதும் அவளால் பேசமுடியவில்லை. இறுகக் கட்டியணைத்துக் கொண்டாள். நடந்தவற்றையெல்லாம் தேவிதீன் தனது மனைவியின் காதுகளில் சொன்னார். அவற்றைக் கேட்டதும் அவள் சத்தமிட்டுக் கதறி அழுதாள்.

இரவு உணவுக்கான சப்பாத்திக்கு கோதுமையை அரைக்கும் போது அவளது கோபம் வெடித்தது. "அந்த தகப்பன் பெயர் தெரியாத புட்டிலாலை இனி இந்தப் பக்கம் பார்த்தால் அடித்து துரத்தி விடுவேன்.என் குழந்தையின் பாதி உயிரை உறிஞ்சி விட்டானே அவன்" என்றாள் அம்மா.

பூலானது வீட்டை நோக்கி சில தீப்பந்தங்கள்வருவது தெரிந்தது. அயலவர்கள் புதினம் பார்க்க வந்து கொண்டிருந்தார்கள்.

'அவர்களிடம் எதுவும் சொல்லாதே. சொன்னால் நாம் தான் பழிச் சொல் ஏற்க வேண்டிவரும். சாப்பிட எதுவும் கொடுக்கவில்லை. உடம்பு சுகமில்லை என்று மாத்திரம் சொல்' என்று பூலானுக்கு உபதேசித்தாள் அம்மா.

அயலவர்கள் வீட்டினுள் வந்து பேச்சுக் கொடுத்தனர். கணவருடன் சேர்ந்து வாழ்வதுதான் நியாயம் என்றனர் சிலர். சில ஆண்டுகளுக்கு பின் திரும்பிப் போனால் போதும் என்றனர் வேறு சிலர். ஆனால் பூலான் அந்த மனித மாமிசம் தின்பவனிடம் எப்போதும் திரும்பிப் போகமாட்டாள்.

அன்றிரவு அவளுக்குப் பாலும் சோறும் கிடைத்தன. அது அவர்களைப் பொறுத்தமட்டில் வெகு ஆடம்பரமான உணவு. அதற்காக வெகுவாக முயன்று அயலவர்களிடம் இரந்திருந்தார்கள்.


உணவு உண்டதும் பூலானுக்கு தூக்கம் கண்ணை சுழற்றியது. தூங்கி விட்டாள். தூக்கத்தில் பலவிதமான சுகமான கனவுகள். கனவுகளுக்கிடையே அவளது அப்பா 'திருமணமான பெண் கணவனுடன் வாழ்வது தான் முறை' என்று திரும்பத் திரும்பச் சொல்வது கேட்டது.

விடிந்து விடும், அவளது நோய் பஞ்சு போலப் பறந்து விடும், ஊசி போட்டிருக்கிறார்களே! காலையில் முதல் வேலையாக அவள் தனது தோழிகளுடனும் சோட்டியுடனும் யமுனைக்கு நீராடச் செல்வாள். பாரத மாதாவின் புண்ணிய தீர்த்தங்களில் ஒன்றான யமுனாதேவி அவளது கறை படிந்த வாழ்வின் கடைசிப் பக்கங்களையாவது கழுவி விடட்டும். பூலான் பல நாட்களுக்குப் பின்னர் நிம்மதியாக தூங்கிக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பு '83



25 வருடங்களாக...



# இளைஞர்களின் நிகழ்காலம் சமூகத்தின் எதிர்காலம்

**நாளைய சமாதானம்**

இன்றைய இளைஞர் சமுதாயத்தின் கையில் ஒரு முக்கிய பணி உள்ளது. அமைதியான ஒரு நல்ல சூழலை இந்நாட்டில் உருவாக்க ஒவ்வொரு பிரஜையும் உழைக்கவேண்டியுள்ளது. **Future Peace** என்ற அமைப்பு இந்தப் பணிக்காக இளைஞர்களை ஒன்றுதிரட்டுகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்து பல்லின மத சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு இளைஞர் கூட்டம் ஒன்றிணைந்து சமாதானம் குறித்த செய்தியினை மக்களிடையே எடுத்துச் செல்ல உழைக்கின்றது. கடந்த வருடம் அநுராதபுரத்தில் கூடிய இவர்கள் பலநாட்கள் அங்கே தங்கியிருந்து மக்களோடு இணைந்து பல செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர்.






21, Siripa Lane, Colombo 05, Sri Lanka
Phone : +94 (0)11-2555247/8, Fax : +94 (0)11-2555249
Email : flict@sltnet.lk

FLICT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed by : Sellam Press - 110, Negombo Road, Peliyagoda.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org